திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

டிசம்பர் 2025,
விலை ரூ.20/-

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:5, Issue:05, Pages:56
DECEMBER-2025, Price Rs.20/-



திருமலையில் வைகுண்ட ஏகாதசி - தங்கத்திருத்தேர்
30-12-2025



திருமலையில்
திருவேங்கடமுடையான்
ஆலயத்தில்
திருக்கார்த்திகை
தீபோத்ஸவத்
திருவிழா,
04-12-2025





ஸ்வத$_4$ர்மமபி சாவேக்ஷ்ய ந விகம்பிதுமர்ஹஸி|
த$_4$ர்ம்யாத்$_3$தி$_4$ யுத்$_3$த$_4$ாச்ச்$_2$ரேயோऽந்யத் க்ஷத்ரியஸ்ய ந வித்$_3$யதே||

**தன்னுடைய தர்மம் என்று பார்த்தாலும் நீ பயப்படக் கூடாது. ஏனெனில், க்ஷத்திரியனுக்குத் தர்ம சம்மதமானப் போரைக் காட்டிலும் வேறு ஒரு மேன்மைத் தரும் கடமை கிடையாது.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–31*

மன்னுமதிட் டிருமண்டங் குடிதான் வாழ
மார்கழிமா தக்கேட்டை நாளில் வந்து
துன்னுபுகழ்த் தொண்டரடிப் பொடியே நீமுன்
றுழாய்மாலைப் பணியடிமை செய்து நாளுந்
தென்னரங்க மணவாளற் கன்பு மிக்குச்
செப்பியநற் றிருமாலை நாற்பத் தைந்தும்
பன்னியநற் றிருப்பள்ளி யெழுச்சி பத்தும்
பழவடியே னுக்கருள்செய் பரிந்து நீயே.



*நிலையான திருமதிள்களையுடைய திருமண்டங்குடி என்னும் திவ்யதேசம் பெருமைபெற்று வாழும்படி, அந்தத் திருத்தலத்தில் மார்கழி மாதத்துக் கேட்டைத் திருநட்சத்திரத்தில் அவதரித்து, மிக்கப் புகழையுடைய தொண்டரடிப் பொடியாழ்வாரே! நீ முற்காலத்தில் அழகிய ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீரங்கநாதனுக்கு எக்காலத்தும், திருத்துழாய்மாலை கட்டிச் சாத்தும் கைங்கர்யத்தைச் செய்து, அதனால் அவன் மீது மேன்மேலும் பக்தி வளர்ந்து, அருளிச் செய்த சிறந்த திருமாலையென்னும் பிரபந்தத்தின் நாற்பத்தைந்து பாசுரங்களையும், சிறப்பித்துச் சொல்லப்பட்ட சிறந்த திருப்பள்ளியெழுச்சியின் பத்துப் பாசுரங்களையும், தொன்று தொட்டு உனக்குத் தாஸனான எனக்கு, அன்புகூர்ந்து, நீ அருள்புரிவாயாக.*

*– ஸ்வாமி வேதாந்த தேசிகர்*



திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# புனிதத் திருக்கோயில்கள் தரிசனம் (பாக்கேஜ் டூர்)

## ஆந்திர மாநில சுற்றுலாத்துறை வளர்ச்சிக் கழகம்

### 1. திருப்பதி உள்ளூர் ஆலய தரிசனம் (தினமும்)

| டிக்கெட்டின் விலை | பேருந்து புறப்படுமிடம் | புறப்படும் நேரம் |
|---|---|---|
| ரூ.200/– குளிர்சாதனமற்றது | ஸ்ரீநிவாசம் & விஷ்ணு நிவாசம் கட்டிடத்தொகுதியிலிருந்து | காலை 6 மணி முதல் 2 மணி வரை |

**தரிசிக்கும் ஆலயங்கள்**




1) ஸ்ரீ பத்மாவதித் தாயார் திருக்கோயில், திருச்சானூர்
2) ஸ்ரீஅகஸ்தீஸ்வர ஸ்வாமி திருக்கோயில், தொண்டவாடா
3) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், ஸ்ரீநிவாசமங்காபுரம்
4) ஸ்ரீவகுளமாதா திருக்கோயில், பாத்தக்கால்வா, திருப்பதி
5) ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், திருப்பதி
6) ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருக்கோயில், திருப்பதி

வழிகாட்டியுடன் கூடிய சொகுசு பேருந்து, சுமார் 50 கி.மீ. பயணம்

### 2. திருப்பதி அருகிலுள்ள ஆலயங்கள் தரிசனம் (தினமும்)

| டிக்கெட்டின் விலை | பேருந்து புறப்படுமிடம் | புறப்படும் நேரம் |
|---|---|---|
| ரூ.500/– குளிர்சாதனமற்றது | ஸ்ரீநிவாசம் & விஷ்ணு நிவாசம் கட்டிடத் தொகுதியிலிருந்து | காலை 8 மணி & 9 மணிக்கு |

**தரிசிக்கும் ஆலயங்கள்**

1) ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி திருக்கோயில், கார்வேடி நகரம்.
2) ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி திருக்கோயில், நாகலாபுரம்.
3) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், நாராயணவனம்.
4) ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், அப்பளாயகுண்ட்டா.
5) ஸ்ரீ கரியமாணிக்க ஸ்வாமி திருக்கோயில், நகரி.
6) ஸ்ரீஅன்னபூர்ணா உடனுறை காசி விஸ்வேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், புக்க (நகரி)
7) ஸ்ரீபள்ளிகொண்டீஸ்வர ஸ்வாமி திருக்கோயில், சுருட்டப்பள்ளி.

வழிகாட்டியுடன் கூடிய சொகுசு பேருந்து, சுமார் 250 கி.மீ. பயணம்

**1. காணிப்பாக்கம்–வேலூர்ஸ்ரீபுரம் பொற்கோயில் (குளிர்சாதனம்)** **ரூ.950/–**

(ஸ்ரீநிவாச மங்காபுரம், காணிப்பாக்கம், வேலூர் பொற்கோயில்)

**2. காணிப்பாக்கம்–திருப்பதி உள்ளூர் ஆலய தரிசனம் (குளிர்சாதனம்)** **ரூ.650/–**

(திருச்சானூர், ஸ்ரீநிவாச மங்காபுரம், கபிலத்தீர்த்தம், இஸ்கான் திருக்கோயில், காணிப்பாக்கம்)

**3. ஸ்ரீகாளஹஸ்தி–திருப்பதி உள்ளூர் ஆலய தரிசனம் (குளிர்சாதனம்)** **ரூ.550/–**

(திருச்சானூர், ஸ்ரீநிவாசமங்காபுரம், கபிலத்தீர்த்தம், இஸ்கான் திருக்கோயில், காளஹஸ்தி)

தொடர்பு கொள்ள... ☎ ஆந்திர மாநில சுற்றுலா தகவல் மற்றும் பதிவு மையம்,
ஸ்ரீநிவாசம் கட்டிடத்தொகுதி, விஷ்ணு நிவாசம் கட்டிடத் தொகுதி : 0877-2289123, 9848007033.

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்
டிசம்பர் 2025
மலர் 05 இதழ் 05



## உள்ளுறை

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| மோக்ஷமளிக்கும் ஏகாதசி | -திரு.கே.இராமநாதன், சேலம். | 7 |
| ஆண்டாளின் கல்யாணக்கிளி | - முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன், சென்னை. | 9 |
| திருக்குறளில் பகவத் கீதை | - டாக்டர் ஆர்.மகாலக்ஷ்மி, உடுமலைபேட்டை. | 10 |
| ஆஞ்சநேயர் வழிபாடு | -திரு.பாலாஜி கணேஷ், சிதம்பரம். | 12 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: சிசுபாலன் | - திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 14 |
| கலியுக வேங்கடேசப் பெருமாள் கோயில் | -திரு.அறந்தாங்கி சங்கர், சென்னை. | 17 |
| உடல் நலத்தைக் காக்கும் விரதம் | -திரு.ரா. ஹரிசங்கர், கும்பகோணம். | 19 |
| திருநெடுங்குன்றம் கல்வெட்டுக்கள் | - பேராசிரியர் ஜி.நரசிம்மன், அனந்தபுரம். | 20 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: சண்டீசர் | -படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 22 |
| பாணன் பனுவல்கள் பரமபதம் அருளும் | -திரு.கே.ஸ்ரீநிவாசன், மன்னார்குடி. | 24 |
| ஆண்டாள் நீராட்டோற்சவம் | -ஸ்ரீ உ.வே.கிடாம்பி பார்த்தசாரதி ஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர். | 31 |
| 12 நாட்கள் தரிசனம் அளிக்கும் பார்வதி தேவி | -திருமதி விஜயலட்சுமி சுப்பிரமணியம், கல்லிடைக்குறிச்சி. | 35 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் | - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 36 |
| கார்த்திகை தீபப் பெருவிழா | -திருமதி மைதிலி சம்பத்,செகந்திராபாத். | 38 |
| அடியேனை ஆட்கொண்டருளே! | -பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி. | 40 |
| 108 திவ்யதேச வைபவம் : திருவேங்கடம் | - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 43 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்:எம்பார் | -ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,சென்னை. | 44 |
| உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம் | - டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி. | 46 |
| ராசிபலன்கள் : டிசம்பர் 2025 | - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 47 |
| நீதிக்கதை:எல்லாம் இறைவன் செயல் | -வி.எஸ். அமேயாஸ்ரீ, கோயம்புத்தூர். | 48 |
| சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி | | 49 |
| சித்திரக்கதை : திருமாலிடம் திருமந்திர உபதேசம் பெற்ற திருமங்கை மன்னன் | | 52 |

**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : தங்கத்திருத்தேரில் உபயதேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.

பின்னட்டை : ஸ்ரீஆண்டாள் – உற்சவ மூர்த்தி (ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருக்கோயில், திருப்பதி)

சிறப்பு ஆசிரியர் :
திரு. அனில்குமார் சிங்ஹால், ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-ஆசிரியர்,
பிரதான ஆசிரியர் (கூடுதல் பொறுப்பு) :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி., பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,

அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ., பி.இடி,
துணை செயலாட்சித் தலைவர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
பிரதான ஆசிரியர் : 2264363

நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்



# மாதங்களில் சிறந்த மார்கழி

எம்பெருமான் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்குத் தாம் அருளிய பகவத் கீதையில் இப்பிரபஞ்சத்தில் உள்ள படைப்புகளில் மிகச் சிறந்தவை அனைத்துமாகத் தாமே எழுந்தருளியிருப்பதாகக் கூறியருளினார். இவ்வகையில், மாதங்களில் நான் மார்கழி மாதமாக இருக்கிறேன் என்று ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா அருளியிருப்பதிலிருந்தே மார்கழி மாதத்தின் மகத்துவம் நமக்குப் புரிகின்றது. திருமலையிலும் வருடம் முழுவதும் அதிகாலையில் சுப்ரபாதமும், திருப்பாவையும் கேட்டருளும் திருவேங்கடமுடையான் இம்மார்கழி மாதத்தின் அதிகாலை பொழுதில் திருப்பாவை மட்டுமே கேட்டருளுகிறார் என்பதின் மூலம் மார்கழி மாதத்தின் கூடுதல் சிறப்பை அறிய முடிகிறது. மனிதர்களின் ஒரு நாட்பொழுது என்பது இருபத்து நான்கு மணி நேரம் கொண்டதாகும். இவ்விருபத்து நான்கு மணி நேரத்தில் தியானம், ஜபம் ஆகிய ஆன்மீகச் சாதனைகளைப் புரிவதற்கு ஏற்ற நேரமாக விடியற்காலை பிரம்மமுகூர்த்த காலத்தினைக் குறிப்பிடுவர்.

அதே சமயம், மனிதர்களின் ஒரு வருடக்காலம் என்பது தேவர்களுக்கு ஒரு நாளாகக் கணக்கிடப்படுகின்றது. ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவால் பெருமையுடன் குறிப்பிடப்பட்ட புனிதமான மார்கழி மாதமானது தேவர்களின் கணக்கில் பிரம்மமுகூர்த்தமாகக் கருதப்படுகின்றது. எனவேதான், ஆன்மீக பூமியாகிய நமது பாரத தேசத்தில் இம்மார்கழி மாதத்தில் திருமணம் போன்ற உலகாயுத உறவுகளுக்கான கொண்டாட்டங்கள் தவிர்க்கப்பட்டு ஸ்ரீவைகுண்ட ஏகாதசி, ஆருத்ரா தரிசனம் உள்ளிட்ட ஆன்மீகம் சார்ந்த நிகழ்வுகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

உலகின் வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களெல்லாம் குளிர்காலத்தில் அவரவர் இல்லங்களிலேயே முடங்கிக் கிடக்க, நம் பாரத தேசத்தின் பக்தகோடிகள் அனைவரும் அதிகாலையில் நடுங்கவைக்கும் குளிரையும் பொருட் படுத்தாமல் தங்களுடைய உடலும் மனமும் குளிர நீராடி, பக்தியோடு தமது இல்லங்களில் பூஜைகளைச் செய்வ துடன், அருகிலுள்ள ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்வதையும் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

ஸ்ரீகிருஷ்ணரையே திருமணம் புரிய விரும்பி காத்தியாயினி நோன்பை மேற்கொண்ட ஸ்ரீஆண்டாள் தன் தோழிகளுடன் ஸ்ரீகண்ணபிரானின் திருமாளிகைக்குச் சென்று, அவ்விரதத்திற்கு வேண்டிய பறையாகிய பாகவத கைங்கர்யத்தைப் பெற்று மகிழ்ந்த விவரத்தை முப்பது பாசுரங்களைக் கொண்ட திருப்பாவை என்னும் பிரபந்தமாக அருளியுள்ளாள். இம்மார்கழி மாதத்தில், திருப்பாவை ஜீயர் என்று புகழப்பட்ட ஸ்ரீராமானுஜரின் நெறிமுறைகளைப் பின்பற்றுகின்ற வைணவத் திருக்கோயில்கள் அனைத்திலும் அத்திருப்பாவைப் பாசுரங்கள் தினந்தோறும் ஓதப்படுவதுடன், அப்பாசுரங்களுக்கு விளக்கம் தரும் வகையில் கதாகாலட்சேபங்களும் நடத்தப்படுகின்றன. அதே போன்று சைவத் திருக்கோயில்களிலும் மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவை பாசுரங்கள் பாடப்படுகின்றன.

மேலும், இம்மார்கழி மாதத்தின் சுக்லபட்ச ஏகாதசியாகிய வைகுண்ட ஏகாதசிக்கு முந்தைய பத்து நாட்களிலும், பிந்தைய பத்து நாட்களிலும் திவ்வியப்பிரபந்தங்கள் அனைத்தும் முற்றாக ஓதப்படும் பகல் பத்து, இராப்பத்து எனப் போற்றப்படும் அத்யயன உற்சவமும் நடத்தப்படுகின்றன. திருமங்கையாழ்வாருக்கு ஸ்ரீரங்கநாதர் அருளிய வரத்தின் காரணமாகச் செந்தமிழ்பாசுரங்களைக் கொண்ட ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தங்கள் வடமொழியில் அமைந்த வேதத்திற்குச் சமமான அந்தஸ்தைப் பெற்றன. தேனினும் இனிய திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களின் பெருமையை உணர்த்தும் பகல்பத்து, இராப்பது உற்சவங்கள் ஸ்ரீராமானுஜ தரிசனத்திற்குப் பெருமை அளிப்பதுடன், மார்கழி மாதத்தின் புனிதத்திற்கு மேலும் புனிதம் சேர்க்கின்றன என்றால் அது மிகையாகாது.

வருடத்தின் அனைத்து நாட்களிலும் வடமொழிவேத பாராயணமும், செந்தமிழில் அமைந்த திவ்வியப்பிரபந்த சாற்றுமறைகளும் இடையறாது ஒலிக்கின்ற புனிதமான திவ்வியதேசமே நம் திருமலை ஆகும். இவ்வருடமும் வழக்கம் போன்று நடைபெற உள்ள பகல்பத்து, இராப்பத்து உற்சவங்களையும், வைகுண்ட ஏகாதசி உற்சவத்தையும் அவரவர் வசதிப்படி நேரிலோ அல்லது ஸ்ரீவேங்கடேஸ்வரா பக்தித் தொலைக்காட்சியிலோ தரிசனம் செய்திடுவோம். மேலும், “சங்கத்தமிழ்மாலை முப்பதும் தப்பாமே” என்று ஸ்ரீஆண்டாள் அருளியபடி நாள்தோறும் திருப்பாவைப் பாசுரங்களை பக்தி சிரத்தையுடன் ஓதி ஸ்ரீஅலர்மேல்மங்கை சமேத ஸ்ரீஸ்ரீநிவாசப்பெருமாளின் திருவருளைப் பெற்று மகிழ்வோமாக!

## ஏகாதசி நாள்

வைணவ மரபில் வைகுண்ட ஏகாதசி மகத்துவம் வாய்ந்த ஒரு பெருவிழாவாகும். புராணங்களின்படி மனிதர்களுக்கு ஓராண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். மார்கழி மாதம் தேவர்களின் விடியற்காலைப் பொழுதாக, பிரம்ம முகூர்த்த காலமாக அமைகிறது. பிரம்ம முகூர்த்தத்தில் திருமால் தன் அறிதுயில் நீங்கி விழித்து எழுவதால் இந்த மாதத்தில் வரும் ஏகாதசி நாள் தனிச் சிறப்புப் பெற்ற நாளாகத் திகழ்கிறது.


## ஆன்மீக நிலை

திருமாலுக்கு மிகவும் உகந்த நாள் ஏகாதசி என்று வைணவ மரபு கூறுகிறது. ஏகாதசி என்ற சொல்லுக்கு பதினோராம் நாள் என்பதே பொருள். இருப்பினும் அதன் உள்ளார்ந்த தத்துவம் அதை முக்தி என்ற பாதையின் வழியாக உயர்த்துகிறது. மனித உடல் 11 இந்திரியங்களால் இயங்குகிறது. இதில் ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து மற்றும் மனமாகிய இந்திரியம் ஒன்று ஆகியவை அடங்கும். இத்தகைய பதினோரு இந்திரியங்களையும் உலகப் பற்றுகளிலிருந்து விலக்கி திருமாலின் திருவடிகளில் நம்மை அர்ப்பணித்து வழிபாடு செய்து வைகுண்ட பதவி பெறுவதே ஏகாதசி விரதத்தின் அடிப்படையாகும். வைகுண்ட பதவி என்பது வெறும் சொர்க்கத்தை அடைவது மட்டுமல்ல. அத்துடன் பிறப்பு–இறப்பு என்ற சுழற்சியில் இருந்து விடுபட்டு இறைவனுடன் ஒன்றி நித்திய சேவையில் ஈடுபடும் ஓர் உயர்ந்த ஆன்மீக நிலையாகும்.

## விரதம் தரும் பலன்

மார்கழி மாதத்தில் வளர்பிறைநாளில் வரும் ஏகாதசியே வைகுண்ட ஏகாதசியாகும். இந்த நாளில் பின்பற்றப்படும் விரதம் என்பது மூன்று கோடி விரதங்களை மேற்கொண்டதற்கான பலனைத் தருவதாகக் கருதப்படும். முக்தியை வழங்கவல்ல இந்த ஏகாதசி மோட்ச ஏகாதசி என்றும் அழைக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஏகாதசியன்றும் பின்பற்றும் விரதங்கள் பாவங்களை நீக்கி முக்தியைத் தரவல்லது என்றாலும் வைகுண்ட ஏகாதசி நாளன்று விரதம் இருந்தால் ஏழு பிறவிகளில் செய்த பாவங்கள் யாவும் நீங்கும் என்பர். தன் வாழ்நாள் முழுவதும் இறை பக்தியுடனும், அறச்சிந்தனை உடனும் உள்ளவர்களே ஏகாதசி நாளன்று மரணம் அடைவர் என்பதும், அவர்களுக்கு மறுபிறவி இல்லை என்பதும், அவர்கள் தேவர்க



ளுக்கு இணையான இடத்தைப் பெறுவர் என்பதும் நம்பிக்கை. எனவேதான் காயத்ரியை விடச் சிறந்த மந்திரமில்லை, தாயை விடச் சிறந்த தெய்வமில்லை, ஏகாதசியை விடச் சிறந்த விரதமில்லை என்ற வழக்கு தோன்றியது.

### ஏகாதசி விழாவின் தோற்றம்

வைகுண்ட ஏகாதசியின் தோற்றம் குறித்துப் பல கதைகள் உண்டு. அவற்றில் மது–கைடபர் என்ற இரண்டு அரக்கர்கள் தேவர்கள் மற்றும் முனிவர் களுக்குப் பல தொல்லைகள் தந்தனர். தேவர்கள் மற்றும் முனிவர்களை அந்த அரக்கர்களிடமிருந்து காத்திடுவதற்காக திருமால் அவர்களுடன் போர் புரிந்து அழித்தார். அப்போது அவர்கள் திருமாலிடம் வரம் வேண்டி நின்றனர். அவர்கள் பெற்ற வரத்தின் பயனாக மார்கழி மாத வளர்பிறை ஏகாதசி நாளன்று வைகுண்ட பதவி பெற்றனர். அன்றைய நாள் திருமால் அவர்களுக்கென்றே வைகுண்ட வாசலைத் திறந்து முக்திப் பேறு தந்தார். திருமாலிடம் சரண் அடைந்த அந்த அரக்கர்கள் தங்களுக்கு வைகுண்ட வாசல் திறந்து அருள் செய்தது போலவே திருமாலின் கோயிலில் இந்த நாளில் சொர்க்க வாசலைக் கடந்து அவரை வழிபடுபவர்களுக்கும் வைகுண்ட வாசலைத் திறந்து அருள் செய்திடும்படி வேண்டினர். திருமாலும் அரக்கர்கள் விரும்பிய வாறே அருள் புரிந்தார்.

### விரத நெறி

உடலாலும் உள்ளத்தாலும் திருமாலுடன் ஒன்றியிருப்பதே விரதம் என்ற சொல்லின் உண்மைப் பொருள் ஆகும். இதனால் ஏகாதசி விரதம் என்பது வெறும் உடல் சடங்காக மட்டும் இல்லாமல் மனதைக் கட்டுப்படுத்தும் ஒரு ஆன்மீகப் பயிற்சியாகக் கருதப்படுகிறது.

ஏகாதசி விரதம் என்பது ஒருநாளில் முடியும் வழிபாட்டுச் சடங்கு அல்ல. மாறாக இது தசமி, ஏகாதசி மற்றும் துவாதசி என மூன்று நாட்களை உள்ளடக்கிய வழிபாட்டு விரத முறையாகும். விரதத் தின் முதல் நாளான தசமி அன்று பகலில் ஒரு வேளை மட்டுமே உணவு உண்ண வேண்டும். இரவு உணவைத் தவிர்த்து பழங்கள் மட்டுமே உண்ண வேண்டும். ஏகாதசி நாளன்று அதிகாலையில் எழுந்து நீராடி திருமாலை வழிபட்டு விரதத்தை மேற்கொள்ள வேண்டும். அன்று நாள் முழுவதும் உணவு உண்ணக் கூடாது. அன்று இரவு முழுவதும் கண்விழித்து திருமாலின் நாமங்களைத் துதித்தல் வேண்டும். துவாதசி நாளன்று குறிப்பிட்ட நேரத்தில் விரதத்தை முடித்திட வேண்டும்.

### பகல் பத்து இராப்பத்து

வைகுண்ட ஏகாதசி நாளை ஒரு விழாவாகக் கொண்டாடச் செய்த பெருமை திருமங்கை ஆழ்வாரையே சாரும். இந்த விழா தமிழின் பக்தி இலக்கியமான நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தை மையமாகக் கொண்டதாகும். வைகுண்ட ஏகாதசி விழா அத்யயன விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அப்போது ஆழ்வார்கள் அருளிய பிரபந்தப் பாடல்கள் பாடப்படுகின்றன. இவ்விழா பகல் பத்து, இராப்பத்து என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது, திருமலை திருப்பதியில் இந்த விழா 25 நாட்கள் கொண்டாடப்படுகிறது. இதில் ஆழ்வார்களின் நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பாடல்கள் பாடப்படு கின்றன. இவ்விழாவின் 24 ஆம் நாளன்று வராக ஸ்வாமி வழிபாடும், 25 ஆம் நாள் தண்ணீர் அமுதோற்சவ விழாவும் நடைபெறுகிறது.

### பூலோக வைகுண்டத்தில் ஏகாதசி

வைகுண்ட ஏகாதசி அன்று சொர்க்கவாசல் தரிசனம் என்பது முக்தியை அளிக்கும் நிகழ்வாகக் கருதப்படுகிறது. அந்த நாளில் பூலோக வைகுண்டம் என்று போற்றப்படும் திருமலை திருப்பதியில் சிறப்பு விழாவாக நடத்தப்படுகிறது. இந்த விழாவினை முன்னிட்டு திருப்பதி ஏழுமலையான் கோயிலில் சொர்க்கவாசல் தரிசனம் மிகச் சிறப்பாக நடை பெறும். இந்நாட்களில் கோயில் மின்விளக்குகள் மற்றும் பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப் பட்டிருக்கும். ஏகாதசி நாளன்று திருமலையப்ப ஸ்வாமி ஸ்ரீதேவி, பூதேவியுடன் தங்கத்திருத்தேரில் திருமாட வீதிகளில் எழுந்தருள்வார். துவாதசி அன்று ஸ்வாமி புஷ்கரணியில் சக்ர ஸ்நானம் எனப்படும் தீர்த்தவாரி நிகழ்வும் நடைபெறும்.

வைகுண்ட ஏகாதசி என்பது பதினோரு இந்திரியங்களை இறைவனுடன் ஐக்கியப்படுத்தும் ஒரு ஆன்மீக முயற்சியாகும். இது தீய சக்தியின் அழிவையும் புனித நாளின் பிறப்பையும் குறிக்கும் விழாவாகும்.

# கிளிக்கட்டு என்னும் ஆண்டாளின் கல்யாணக்கிளி



திருவில்லிபுத்தூர் திருத்தலத்தில் தினந்தோறும் மிக வைபவமாகக் கொண்டாடப்படும் கல்யாணக்கிளி சிறப்பு வாய்ந்தது. ஸ்ரீ ஆண்டாள் ஸ்ரீரங்கநாதருக்கு சுக பிரம்ம ரிஷியைக் கிளி ரூபத்தில் தூது அனுப்புகிறாள். தனக்காக தூது செல்லும் கிளியிடம் என்ன வரம் வேண்டும் என்று ஆண்டாள் கேட்க, சுக பிரம்ம ரிஷி, “இதே வடிவில் தங்களின் திருக்கரங்களில் என்றும் நான் இருக்க அருள்புரிய வேண்டும்'' என்று கேட்டாராம். அன்றிலிருந்து ஆண்டாளின் இடக்கையில் வீற்றிருக்கும் பாக்கியத்தைப் பெற்றார். இதற்கு கல்யாணக்கிளி என்று பெயர். கிளியைத் தினந்தோறும் புதிதாக உருவாக்கப்பட்டு ஸ்ரீஆண்டாளுக்கு அணிவிப்பது வழக்கம். திருவில்லிபுத்தூரில் தற்காலம் வரை பல சிறப்பு வாய்ந்த கலைகளில் ஒன்று கிளிக்கட்டு என்பதாகும்.

சுத்தமான வாழைநார் மற்றும் மரவள்ளிக்கிழங்கின் இலைகளால் கல்யாணக்கிளியின் உடலும் முகமும் செய்யப்படுகிறது. மரவள்ளிக் கிழங்கின் இலைகளை மேலும் மேலும் சுருட்டி அதன்மேல் நாரால் சுற்றி மீண்டும் இலைகளையும் தழைகளையும் சுற்றிச் சிவப்பு அரளி, வெள்ளை அரளிகளை இறக்கைக்குக் கொடுத்து, உள்ளிருக்கும் நார் வெளித் தெரியாமல் கட்டப்பட்டு அதன் சிவந்த மூக்கிற்காக மாதுளம் பூவின் ஓட்டினை எடுத்து மூக்கினைப் போல் வெட்டி வைத்து கட்டப்படுகின்றது. கருப்பான கண்களுக்குக் காக்காய்ப்பொன் என்பதனை வைத்துச் சுருட்டி நிறம் கொடுத்து இந்தக் கிளி உருவாக்கப்படுகின்றது. இதனை உருவாக்க நான்கு மணிநேரம் தேவைப்படும்.

இக்கிளி ஒவ்வொரு நாளும் காலையில் உருவாக்கப்பட்டு அன்று மாலை ஆண்டாளின் திருக்கரத்தினை அலங்கரிக்கும். மறுநாள் காலை விஸ்வரூப தரிசனத்திற்கு முன் இந்தக்கிளி எடுக்கப்படும். இந்தக் கிளியைப் பெற்று வீட்டிற்குக் கொண்டுவந்தால் நமது அனைத்து தடைகளும் நீங்கி சகல சௌபாக்கியங்களும் பெறலாம் என்பது ஐதீகம்.



*கூட்டிலிருந்து கிளியெப்போதும் கோவிந்தா!*
*கோவிந்தா! என்றழைக்கும்*
*ஊட்டுக்கொடாது செறுப்பனாகில்*
*உலகளந்தான் என்று உயரக்கூவும்...*

*– நாச்.தி.12–9*

ஆண்டாள் எம்பெருமானைப் பிரிந்து உடலும் மனமும் சோர்ந்து வாடியிருக்கும் போது, கூட்டில் உள்ள கிளியானது ஆண்டாளின் வருத்தம் தீரும் விதத்தில் ஆண்டாள் சொல்லிப் பழக வைத்த எம்பெருமானின் திருநாமத்தை “கோவிந்தா... கோவிந்தா...” என அழைத்தது. எம்பெருமானைக் காணாத வருத்தத்தால் ஆண்டாள் அக்கிளிக்கு உணவு வழங்கவில்லை. உடனே அக்கிளியானது “உலகளந்தான்.. உலகளந்தான்...” என்று பெருத்தக் குரலெடுத்து கத்தியது என்று கிளியின் பெருமையை நாச்சியார் திருமொழியால் அறியலாம்.

*- முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன், சென்னை, 72995 87879*



# திருக்குறளில் பகவத் கீதை

– டாக்டர் ஆர்.மகாலக்ஷ்மி,
உடுமலைபேட்டை, 99425 61810

இந்து மதம் அருவம், உருவம், அருவுருவம் என்ற மூன்று நிலைகளில் வழிபடுவதை ஏற்கிறது. திருவள்ளுவர் அருவ வழிபாட்டையோ, அருவுருவ வழிபாட்டையோ ஆதரித்தோ மறுத்தோ எந்த இடத்திலும் கருத்துக்கள் கூறியதாக அறிய முடியவில்லை. ஆனால், உருவ வழிபாட்டை ஏற்கிறார் என்பதற்கான சான்றுகள் திருக்குறளில் உள்ளன. இந்து மதத்தில், ஒரு மனிதன் இறைவனை வணங்கும் போது பாதாதி கேசமாக வணங்குவது முறை. இம்முறையை வள்ளுவரும் பின்பற்றுகிறார்.

''தனக்குவமை இல்லாதான் தாள்
சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர்
நீந்தார் இறைவன் அடி சேராதார்''

இதில் அடி, தாள் என்று இறைவனுடைய பாதத்தினைக் குறிப்பிடுகிறார்.

மனிதன் தன் மனத்தை எப்பொழுதும் இறைவனிடத்தில் வைத்து வணங்கி வழிபட வேண்டும். இவ்வாறு, மனிதன் முழுமையாக தன்னை இறைவனிடத்தில் ஒப்படைக்கும் போது ஒருவர் இறைவனை வந்தடைகிறார் என பகவத் கீதை குறிப்பிடுகிறது. ''மன்மனா பவ மத்பக்தோ மத் யாஜி மாம் நமஸ்குரு மாம் ஏவைஷ்யஸி யுக்த் வைவம் ஆத்மா னாம் மத பரா யண'' இவ்வாறு முழுமையாக இறைவனிடத்தில் தன்னைத் தருபவன் இறைவனின் திருவடியை அடைய முடியும் என பகவத் கீதை குறிப்பிடுகிறது.

இறைவனின் அடியைக் குறிப்பிட்ட வள்ளுவர் அடுத்து மனிதக் காதலையும், தெய்வீகக் காதலையும் குறிப்பிட விரும்புகிறார். மாந்தர்கள் கொள்ளும் இயல்பான காம உலகத்தை ஒரு புறமும், பேரின்பம் அளிக்கும் தாமரைக் கண்ணனின் உலகத்தை மறுபுறமும் காட்டி மனிதக் காதலையும், தெய்வீகக் காதலையும் இணைத்துப் பேசுகிறார்.

''தாம் வீழ்வார் மென் தோள் துயிலின் இனிது கொள் தாமரைக் கண்ணான் உலகு'' அதாவது, ஒரு தலைவன் தான் விரும்பும் காதலியின் மென் தோள்களில் உறக்கம் கொள் கிறான். அத்தகைய காம இன்பத்தை விடவா தாமரைக் கண்ணன் உலகு பெரிது எனக் கேள்வி எழுப்புகிறான். கோபால கிருஷ்ணமாச்சாரியார் தனது உரையில் "தாமரைக் கண்ணான்" என்பதற்கு அடியார்களின் இதயத் தாமரையில் வீற்றிருக்கும் கடவுள் என விளக்குகிறார்.

பகவத் கீதையில்,

''ஈச்வர: ஸர்வ பூதாநாம் ஹ்ருத்தேசே அர்ஜுன திஷ்டதி
ப்ராமயன் ஸர்வ பூதானி யந்திராரூடானி மாயயா''
''அஹம் ஆத்மா குடா கேச ஸர்வ பூ தாச ஸ்தித:
அஹம் ஆதிச் சமத்யம்ச பூதாநாம் அந்த ஏவ ச''

முழுமுதற் கடவுள் எல்லா உயிர் வாழிகளின் இதயத்தில் வாழ்கிறார். அதனால் எல்லா உயிர் வாழிகளின் பயணங்களையும், அவரவர் இதயத்தில் வீற்றுள்ள முழுமுதற் கடவுள் வழி நடத்துகிறார் என பகவத் கீதை குறிப்பிடுகிறது. மேலும், கிருஷ்ணர் பகவத் கீதையில் தன்னைப் பற்றிக் குறிப்பிடும் போது "எல்லா உயிர்களின் இதயங்களிலும் வீற்றிருக்கும் பரமாத்மா நானே என்றும், நடுவும் இறுதியும் நானே" என்றும் குறிப்பிடுகிறார்.


வள்ளுவர் அகவாழ்வில் இன்பச் சுவை இருப்பது போல, ஆன்மீக உலகில் பேரின்பச் சுவை இருப்பதையும் உணர்த்துகிறார்.

ஆதித்யர்களில் நான் விஷ்ணு என ***''ஆதித்யா னாம் அஹம் விஷ்ணுர்''*** (10.21), என்று பகவத் கீதையில் கிருஷ்ணர் கூறுகிறார். கிருஷ்ணர் இவ்வாறு கூறுவதால் திருவள்ளுவரும் கிருஷ்ணரைத்தான் "தாமரைக்கண்ணான்" என்று உணர்த்துகிறார் என்ற எண்ணத்தினை உருவாக்குகிறது.

திருவள்ளுவரும் திருக்குறளின் முதல் குறளில், ***''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு''*** எனத் தொடங்குகிறார். பகவத் கீதையில் ***''அக்ஷராணாம் அகாரே அஸ்மி...''*** எனக் குறிப்பிடுகிறார். எழுத்துக்களில் நான் அகரமாக இருக்கிறேன் என்றுதான் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் குறிப்பிடுகிறார். எனவே, திருவள்ளுவரும் பகவத் கீதையின் கருத்துக்களை தனது குறட்பாக்களில் பிரதிபலிப்பதாகவே அமைத்து இருப்பதை உணரலாம்.

ஸ்ரீகிருஷ்ணர் பகவத் கீதையில் உணர்த்தியதை, வள்ளுவர் தனது திருக்குறளில் பல இடங்களில் உணர்த்துகிறார். அதில் இறைவனைப் பற்றிக் குறிப்பிடும்போது முழுமையாக சரணாகதி எண்ணத்துடன், தாமரைக் கண்ணனின் திருவடியைப் பற்றினால் மட்டுமே அவனை முழுமையாக அடைய முடியும். மானிடர் கொள்ளும் சிற்றின்பத்தை விட, பேரின்ப நிலை தரும் தாமரைக் கண்ணனின் உலகம் இருப்பதை உணர்த்தி மானிடர்களுக்கு பேரின்ப உலகை அடைய வழிகாட்டுகிறார்.

## ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கேள்வி பதில்



56. பூர்வாசார்யரான வடக்குத்திருவீதிப்பிள்ளை ஸ்வாமியை திவ்யஸூரிகளில் எவருடன் ஒப்பிடலாம்?
பெரியாழ்வாரோடு ஒப்பிடுவர். இவர் ஆடி மாஸம் சுவாதி நக்ஷத்ரத்தில் அவதரித்தார். பெரியாழ்வார் எம்பெருமான் க்ருபையினால் திவ்ய ப்ரபந்தத்தை அருளினார். வடக்குத் திருவீதிப்பிள்ளை ஈடு வ்யாக்யானத்தை நம்பிள்ளை கருணையினால் எழுதினார். ஆழ்வார் கோதாதேவியை க்ருஷ்ண அநுபவத்தோடு வளர்த்தார். வடக்குத் திருவீதிப் பிள்ளை தம்முடைய குமாரர்களான பிள்ளை லோகாசார்யர், அழகியமணவாளப் பெருமாள் நாயனார் ஆகியோரை பகவதநுபவத்தோடு வளர்த்தார்.
57. மணவாள மாமுனிகள் ஸ்ரீபாஷ்யத்தை எந்த ஆசார்யரிடம் காலக்ஷேபமாகக் கேட்டார்?
கிடாம்பி நாயனார்
58. இராமாயண தனிஸ்லோகீ மற்றும் பாசுரப்படி இராமாயணம் ஆகியவற்றை அநுக்ரஹித்த வ்யாக்யான சக்ரவரத்தி யார்?
பெரியவாச்சான்பிள்ளை
59. மணவாளமாமுனிகளின் திருவாராதனத்தில் மூர்த்தியின் திருநாமம் என்னைத் தீமனம் கெடுத்தாய் (என் மனத்தைத் தூய்மை ஆக்கினவன்) என்று நம்மாழ்வார் திருவாய்மொழி இரண்டாம் பத்தில் அருளிய பாசுரம் எது?
திருவாய்மொழி 2-7-8 "வாமநன் மரகத வண்ணன்".


**- தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.**
**தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.**

# தோஷங்கள் நீக்கும் ஆஞ்சநேயர் வழிபாடு

திரு. பாலாஜிகணேஷ், சிதம்பரம்
9842550844.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக ஆஞ்சநேயர் திகழ்கிறார். "சர்வமங்கள கார்யானு கூலம்" என்று ஆஞ்சநேயர் வழிபாட்டின் பலனைக் குறிப்பிடுவார்கள்.

அதாவது தன்னை வழிபடும் பக்தர்களுக்கு தன்னிடம் உள்ள எல்லா ஆற்றலையும் கொடுத்து மனதில் வலிமையை ஏற்படுத்துவார் என்பது ஆஞ்சநேய வழிபாட்டின் ஐதீகமாகும். வாயுவின் புத்திரர் என்பதால் அவர் காற்றோடு காற்றாகக் கலந்து, எங்கும் நிறைந்து நம்மை காப்பதாக நம்புகிறார்கள்.




சேவை செய்வதற்காகவே அவதாரம் எடுத்தவர் ஆஞ்சநேயர். மகாவிஷ்ணு இராம அவதாரம் எடுத்த போது, அவருக்குச் சேவை செய்வதையே தன்னுடைய உயிர் மூச்சாகக் கொண்டு ஆஞ்சநேயர் வாழ்ந்தார்.

இதனால் இராமபிரானுக்கு எங்கெங்கு ஆலயம் உள்ளதோ, அங்கெல்லாம் ஆஞ்சநேயருக்கு தனிச் சன்னதி அமைந்துள்ளது. இவை தவிர ஆஞ்சநேயருக்கு என்றே தனியாக ஆலயங்களும் உண்டு. தென் இந்தியாவை விட, வட இந்தியாவில்தான் ஆஞ்சநேயருக்கு அதிகமான கோயில்கள் உள்ளன.

இராம அவதாரம் நிறைவு பெற்றுவிட்ட போதிலும் ஆஞ்சநேயர் இன்னமும் சிரஞ்சீவியாக இருப்பதாக பக்தர்கள் நம்புகிறார்கள். அதனால்தான் இராமாயணச் சொற்பொழிவுகள், இராம கீர்த்தனம் ஆகியவை எங்கு நடந்தாலும் அங்கெல்லாம் ஆஞ்சநேயர் அமர்ந்து ஸ்ரீராம தியானத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொள்வார் என்கிறார்கள்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இராம நாமம் எங்கெல்லாம் கேட்கிறதோ, அங்கு நிச்சயம் ஆஞ்சநேயர் இருப்பார். அந்த வகையில் யார் ஒருவர் இராம நாமத்தை துதிக்கின்றாரோ, அவரிடம் ஆஞ்சநேயர் நெருங்கிவிடுவார் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆஞ்சநேயர் வழிபாட்டின் ஒவ்வொரு விஷயத்திலும் அர்த்தம் பொதிந்துள்ளது. அந்தத் தாத்பர்யத்தை அறிந்து, உணர்ந்து நாம் ஆஞ்சநேயரை வழிபாடு செய்தல் வேண்டும்.

பெரும்பாலும் ஆஞ்சநேயருக்கு வடை மாலைச் சாற்றி வழிபாடு செய்வது வழக்கமாக உள்ளது. எப்போதும் இராமருக்கு சேவை செய்து கொண்டிருந்த ஆஞ்சநேயருக்கு களைப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக உளுந்து தானியத்தில் அஞ்சனாதேவி வடை தயாரித்து கொடுத்தாள். இதனால்தான் ஆஞ்சநேயருக்கு வடை மாலைச் சாற்றும் பழக்கம் ஏற்பட்டது.

வெற்றிலை மாலை வழிபாடு, வெண்ணெய் காப்பு அலங்காரம் ஆகியவையும் பக்தர்களால் ஆஞ்சநேயருக்கு விரும்பி செய்யப்படுகிறது. இலங்கை அசோகவனத்தில் தன்னை சந்திக்க வந்த அனுமனை வாழ்த்தி அருகில் இருந்த வெற்றிலையைப் பறித்து சீதை மாலையாக அணிவித்தார். அன்று முதல்

ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை அணிவிப்பது வழக்கமாகி விட்டது. அதுபோல இராமரின் ஆயுள் பலத்துக்காக நெற்றியில் செந்தூரம் பூசுவதாக சீதாதேவி கூறியதைக் கேட்ட ஆஞ்சநேயர், "என் பிரபு இராமனின் ஆயுள் கூடுமென்றால் நானும் உடல் முழுவதும் செந்தூரம் பூசிக்கொள்வேன்" என்று பூசிக்கொண்டார். இதில் இருந்தே ஆஞ்சநேயருக்கு செந்தூரம் பூசி வழிபடும் பழக்கம் ஏற்பட்டது.

சனி மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் ஸ்ரீராமஜெயம் கூறி ஆஞ்சநேயருக்கு செந்தூரம் சாற்றி வழிபட்டால் நற்பலன்கள் கிடைக்கும்.

ஆஞ்சநேயருக்கு வாலில் தான் சக்தி அதிகம் என்பதால் வாலில் சந்தனம், குங்குமம் பொட்டு வைத்து 48 நாட்கள் வழிபாடு செய்தால் உரிய பலனைப் பெறலாம். இது நவக்கிரக வழிபாட்டுக்கு நிகரானது. மனதில் தாங்க முடியாத அளவுக்கு வேதனை உள்ளதா?

ஆஞ்சநேயரின் சிறப்புகளை கூறும் சுந்தர காண்டம் படியுங்கள். துன்பங்கள் தூசியாகப் பறந்தோடி விடும். அவரை நினைத்தாலே புத்தி வரும், பக்தி வரும், புகழ் வரும், செல்வம் வரும், மன உறுதி வரும், வீரம் வரும். அனைத்துக்கும் மேலாக அவர் கடும் பிரம்மச்சர்யத்தை கடைபிடிப்பதால் நம் மனதில் ஒரு நொடி கூட தேவை இல்லாத காம உணர்வு வரவே வராது. ஆஞ்சநேய விரதம் இருந்தால், குடும்பத்தில் குதூகலம் உண்டாகும்.




எதிரிகளின் தொல்லை நீங்கி வெற்றி கிடைக்கும். உறவினர்களிடையே நட்பு அதிகரிக்கும். இதன் மூலம் குபேரனுக்கு இணையான வாழ்வைப் பெறலாம்.

தினமும் காலை அருகில் உள்ள பெருமாள் ஆலயத்தில் ஆஞ்சநேயரை வழிபட்டு, உங்கள் பணிகளை செய்து வந்தால் வெற்றி மீது வெற்றி வரும். 13 முடிச்சுள்ள அனுமன் விரதக் கயிறை கையில் கட்டிக் கொண்டால் உங்களது எல்லா முயற்சிகளும் இடையூறு இல்லாமல் நிறைவேறும்.

ஆஞ்சநேயரின் சன்னதி முன்பு நின்று, அவரது மூல மந்திரத்தை 9 தடவை சொல்லி வழிபட்டால் வாழ்வில் மறுமலர்ச்சி உண்டாகும். கடுமையான வியாதிகள் குணமாகும்.

ஆஞ்சநேயரிடம் யார் ஒருவர் மனதைப் பறி கொடுக்கிறாரோ அவர் மனம் தெளிவடையும். அவரால் சிறந்த முடிவுகளை எடுக்க முடியும். ஆஞ்சநேயரின் தீவிர பக்தராக மாறி விட்டால், ஆஞ்சநேயரின் முழு பலமும் அவருக்கு வந்து விடும் என்பது ஐதீகம்.

எனவே பெருமாள் ஆலயத்தில் வழிபாடு செய்யும் போது ஆஞ்சநேயரிடம் மனம் விட்டு பேசுங்கள். "யாராலும் சாதிக்க முடியாத காரியங்களையும் சாதிக்க வல்லவரான ராம தூதனே! கருணைக் கடலே! பிரபோ... என்னுடைய எல்லா முயற்சிகளுக்கும் வெற்றி தந்து சாதித்துத் தாருங்கள்" என்று கேளுங்கள்.

ஆஞ்சநேயர் பணிவின் அணிகலனாகவும், ராஜதந்திரத்தில் சாமர்த்தியசாலியாகவும், வாக்கு சாதுர்யத்தில் வல்லவராகவும், வீரத்தில் நிகர் இல்லாதவராகவும் விளங்கி வருகிறார். அவரை வழிபட்டால் இத்தனை சிறப்புகளும் நமக்கும் நிச்சயம் வந்துசேரும்.

உறுதியான உடல் வலிமை, ஆழ்ந்த அறிவு, துணிச்சல், புகழ், ஆரோக்கியம், திறமையான பேச்சு, வீரம் இவையாவும் அனுமனின் சிறப்புகளாகக் கூறுவர். இவற்றை நாமும் பெற்றிட அனுமனைத் துதித்திடுவோம்.




# விரோதியாய்ப் பிறந்த விதேயன்

# சிசுபாலன்

– திரு.எஸ்.ஸ்ரீதுரை,
காஞ்சிபுரம், 94861 39685

ஸ்ரீமத்பாகவதபுராணம், ஸ்ரீமஹாபாரதம் ஆகிய இரண்டிலும் இடம் பெறுகின்ற பற்பல கதாபாத்திரங்களுள் சிசுபாலனும் ஒருவனாவான். ஸ்ரீகிருஷ்ணரின் பரமவிரோதியாக விளங்கிய இச்சிசுபாலன் உண்மையில் அவருடைய சேவகனேயாவான்.

ஒருமுறை பிரம்மதேவரின் மானச புத்திரர்களாகிய சனகர், சனாதனர், சனந்தனர், சனத்குமாரர் ஆகிய நால்வரும் ஸ்ரீமந்நாராயணனைத் தரிசிக்க ஸ்ரீவைகுண்டத்துக்குச் சென்றனர். துவாரபாலகர்களான ஜயன், விஜயன் இருவரும் எம்பெருமானைத் தரிசனம் செய்ய சனகாதி முனிவர்களுக்கு அனுமதி தர மறுத்தனர்.

இதனால் சினம் கொண்ட சனகாதி முனிவர்கள் ஜய, விஜயர்கள் இருவரையும் பூலோகத்தில் பிறக்க வேண்டும் என்று சாபம் அளித்தனர். முனிவர்களின் பெருமையை உணர்ந்து ஜய, விஜயர்கள் மன்னிப்பு வேண்ட, மனமிரங்கிய சனகாதியர், மூன்றே மூன்று பிறவிகளுக்குப் பின்பு அவ்விருவரும் மீண்டும் ஸ்ரீவைகுண்ட லோகத்தை வந்தடையலாம் என்ற வரத்தையும் வழங்கியருளினர்.

இதன் பின்பு இரண்யாட்சன் – இரண்யகசிபுவாகவும், இலங்கேஸ்வரன் – கும்பகர்ணனாகவும் பிறந்து எம்பெருமானால் கொல்லப்பட்ட ஜய, விஜயர்கள் இருவரும் துவாபர யுகத்தில் சிசுபாலனாகவும், தந்தவக்த்ரனாகவும் பிறந்தனர்.

சேதிநாட்டை ஆண்ட தாமகோஷன் என்பவருக்கும், ஸ்ருதஸ்ரவா என்பவளுக்கும் மகனாகப் பிறந்தவனே சிசுபாலன். குந்திதேவியின் சகோதரியாகிய ஸ்ருதஸ்ரவா ஸ்ரீகிருஷ்ணரின் அத்தைகளுள் ஒருத்தி ஆவாள்.

சிசுபாலன் மூன்று கண்களுடனும், நான்கு கரங்களுடனும் கூடிய விசித்திரத் தோற்றம் கொண்டவனாகப் பிறந்தான். அக்குழந்தையைக் கண்டு அனைவரும் பயந்ததால் அதனை ஆற்றில் வீசிவிடலாம் என்று யோசனைக் கூறப்பட்டது. அச்சமயத்தில் வானத்தில் இருந்து ஒலித்த அசரீரியானது, இக்குழந்தையைக் கொல்ல வேண்டாம்! இவனுடைய மரணத்துக்குக் காரணமாகக் கூடியவர் இவனைத் தொடும்போது இவனுடைய மூன்றாவது கண்ணும், அதிகப்படியான இரண்டு கரங்களும் தானே உதிர்ந்துவிடும் என்று கூறியது.

இவ்வதிசயக் குழந்தையைப் பார்க்கும் ஆவலில் பற்பல தேசத்து மன்னர்களும் சேதி நாட்டுக்கு வருகை தந்தனர். சிறிது காலத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவானும் சேதிநாட்டுக்கு எழுந்தருளினார். குழந்தை சிசுபாலனை அவர் தூக்கிக்கொள்ள முயற்சித்த பொழுது அதன் மூன்றாவது கண்ணும், கூடுதலான கரங்கள் இரண்டும் உதிர்ந்துவிட்டன. இதைப் பார்த்த ஸ்ருதஸ்ரவா, தான் பெற்ற குழந்தையாகிய சிசுபாலனைக் கொல்லகூடியவர் ஸ்ரீகிருஷ்ண பகவானே என்பதை உணர்ந்து நடுங்கினாள்.

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.**

## பக்தர்களுக்கு விண்ணப்பம்

திருமலையில் திருமுடிக்காணிக்கையைச் செலுத்துவது பாரம்பரியமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்ற ஒரு நேர்த்தி கடனாகும். திருமலையில் தலைமுடிக் காணிக்கைச் செலுத்துவதற்கு எவ்விதமான கட்டணத்தையும் தி.தி.தே. பெறுவதில்லை. ஆகையால் பக்தர்கள் தலைமுடிக் காணிக்கையைச் செலுத்தும்போது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல்ப்ரீ எண். **1800-425-4141** க்குத் தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்

கிருஷ்ணா! என்னுடைய அன்பு மகன் சிசுபாலனைக் கொல்லமாட்டேன் என்று எனக்கு வரம் கொடுப்பாயாக! என்று அவள் வேண்டினாள்.

ஸ்ரீகிருஷ்ணபகவானும், கலங்காதீர்கள் அத்தை! உங்கள் மகன் சிசுபாலன் நூறு முறை செய்யும் அபராதங்களை நான் பொறுத்துக் கொள்வேன். அதற்கும் மேல் அவன் அபராதம் செய்தால் மட்டுமே அவனைக் கொல்வேன் என்று உறுதிமொழி கூறிவிட்டு துவாரகைக்குத் திரும்ப எழுந்தருளினார்.

வாலிபனாக வளர்ந்த சிசுபாலன் தனது மரணத்திற்குக் காரணமாக விளங்கக் கூடியவர் ஸ்ரீகிருஷ்ண பகவானே என்பது தெரிந்துபோனதால் அவரிடம் தீராத பகைமை பாராட்டினான். ருக்மிணிதேவியை மணமுடிக்கும் ஆவலுடன் தான் காத்திருக்கையில் ஸ்ரீகிருஷ்ணபகவான் ருக்மிணியைக் கவர்ந்து சென்றதால் கோபமுற்ற சிசுபாலன் பகவானுடன் சண்டை இட்டுத் தோல்வியைத் தழுவினான். இந்த நிகழ்விற்குப் பின்னர் ஸ்ரீகிருஷ்ணபகவான் மீது சிசுபாலன் கொண்ட கோபம் மேன்மேலும் வளர்ந்தது.

சிறிது காலத்தில், ஸ்ரீகிருஷ்ணரின் துணையோடு ஜராசந்தனை பீம சேனன் வீழ்த்தினான். அதன் பின்பு இப்பூவுலகில் பாண்டவர்களை வெல்லக்கூடியவர்கள் எவரும் இல்லை என்ற நிலை தோன்றியதை ஒட்டி ராஜசூய யாகம் ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தருமபுத்திரரால் அழைப்பு விடுக்கப்பட்ட பல்வேறு நாடுகளின் அரசர்களும் ராஜசூய வேள்வி நடைபெற்ற சபைக்கு வருகை தந்தனர். அவர்களுள் சேதி தேசத்து அரசனாகிய சிசுபாலனும் ஒருவன்.

தர்மங்கள் அனைத்தையும் நன்கறிந்த பீஷ்மாச்சாரியாரின் அறிவுரைப்படி ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கு முதல் தாம்பூலம் வழங்கிச் சிறப்பிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. தருமபுத்திரரின் உத்தரவுப்படி சகாதேவனின் மூலம் ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கு முதல் தாம்பூலம் வழங்கப்பட்டது.

ஏற்கெனவே ஸ்ரீகிருஷ்ணரிடம் விரோதம் பாராட்டி வந்த சிசுபாலனுக்கு இதைக் கண்டு மிகுந்த கோபம் உண்டாயிற்று. ஸ்ரீகிருஷ்ணருக்கு முதல் தாம்பூலம் வழங்கச் சொன்ன பீஷ்மரையும், அந்த அறிவுரையை ஏற்றுக்கொண்ட தருமபுத்திரரையும், அண்ணனின் உத்தரவுப்படி பகவானுக்கு முதல் தாம்பூலம் வழங்கி மரியாதை செய்த சகா தேவனையும் சகட்டுமேனிக்குத் தாக்கிப் பேசிய சிசுபாலன் அதன் பின்னர் பகவானையே இழித்துப் பேசலானான்.

இடைச்சாதியில் பிறந்த ஸ்ரீகிருஷ்ணர் மன்னர்களுக்குச் சமமாக வைத்துப் போற்றத்தக்கவர் அல்லர் என்றும், மாடுகன்றுகளை மேய்த்தவர் என்றும், கம்சனுக்குப் பயந்து கோகுலத்தில் ஒளிந்து வளர்ந்தவர் என்றும், ஜராசந்தனை வெல்ல முடியாமல் போரில் பின்வாங்கிவிட்டுப் பின்னர் பீம சேனனைக் கொண்டு அவனைக் கொன்ற கோழை என்றும் பலவாறு நிந்தனை செய்ததுடன், தனக்குக் கிடைத்த முதல் தாம்பூலத்தை கிருஷ்ண பகவான் பெற்றுக்கொண்டது தவறு என்றும் கூறினான்.

நினைவு தெரிந்த நாள் முதல் ஸ்ரீகிருஷ்ணரை நிந்தனை செய்துவந்த சிசுபாலன் அழிய வேண்டிய நேரம் நெருங்கியது. பலரும் கூடி இருந்த சபையில் தம்மைப் பழித்தது மட்டுமின்றி தம் அடியார்களும் தர்மாத்மாக்களுமாகிய பீஷ்மரையும், தருமரையும் அச்சிசுபாலன் அவமரியாதையாகப் பேசியதை பகவானால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை.

சிசுபாலனின் தாயாருக்குத் தாம் அளித்திருந்த வரத்தின்படி, அவனால் தமக்கு இழைக்கப்பட்ட அபராதங்கள் நூறு என்ற எண்ணிக்கையையும் தாண்டிவிட்டதை உணர்ந்த ஸ்ரீகிருஷ்ணர் தமது சுதர்ஸனத்தினை வரவழைத்துச் சிசுபாலனின் சிரத்தை அறுத்துத் தள்ளினார். சபையோர்களும் கொடியவனாகிய சிசுபாலனின் அழிவைக் கண்டு

மிகவும் மகிழ்ந்து ஸ்ரீகிருஷ்ண பகவானைப் பலவாறு போற்றித் துதித்தனர். இதற்குச் சிலகாலம் கழித்து சிசுபாலனின் நண்பனாகிய தந்தவக்த்ரனும் எம்பெருமானின் பஞ்சாயுதங்களில் ஒன்றாகிய கௌமோதகீ என்னும் கதாயுதத்தால் கொல்லப்பட்டான்.

எம்பெருமானின் திருக்கரங்களால் கொல்லப் பட்ட சிசுபாலனும், தந்தவக்த்ரனும் சனகாதி முனிவர்கள் அளித்த சாபம் தீர்ந்து மீண்டும் ஜய விஜயர்களாக மாறிப் பழையபடி ஸ்ரீவைகுண்ட லோகத்தில் காவல்புரியத் தொடங்கினர்.

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் கிருஷ்ணராக அவதரித்து லீலைகள் பல புரிந்த காலத்தில், தாமாக எவரையும் பகைத்துக் கொண்டதில்லை. குறிப் பாகப் பாண்டவர்களும் கௌரவர்களும் தங்களுக் குள் பகையை வளர்த்துக்கொண்டு சண்டையிடுவது மிகப்பெரிய அழிவையே ஏற்படுத்தும் என்பதால், இரு தரப்பினரும் சமாதானமாகப் போக வேண்டும் என்றே ஸ்ரீகிருஷ்ணபகவான் வலியுறுத்தி வந்தார்.

ஆனாலும் கூட துரியோதனாதியர்களும், கர்ணன், சகுனி உள்ளிட்டவர்களும் அவருடைய பெருமை களை எண்ணிப் போற்றாமல், அவரை நிந்தனை செய்து வந்தனர். இவர்களுடன் சிசுபாலன் போன்ற வர்களும் பகவானை நிந்தனை செய்து வந்தனர்.

உலக மக்களிடையே சமாதானம் நிலவிடுவதற் கும், தருமம், நியாயம் ஆகியவை நிலைபெறுவ தற்கும் முயற்சி செய்யும் ஒருவர் பகவானாகவே இருந்தாலும் பல தரப்புகளிலிருந்தும் எதிர்ப்படும் நிந்தனைகளையும், பழிச்சொற்களையும் அவர் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்ற செய்தியை மகாபாரதம் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றது.

அதுமட்டுமா? பாராட்டுகளுக்கு மயங்காமல், பழிச்சொற்களை எண்ணித் தயங்காமல் அவரவரும் தங்களின் கடமைகளை ஆற்றிட வேண்டும் என்ற வாழ்க்கைப் பாடத்தையும் அல்லவா மகாபாரதம் என்னும் இந்த மகாகாவியம் நமக்கு போதிக்கின்றது.

## வாழ்வியல் நெறிகள்



## உண்மை வழிபாடு!

-தொகுப்பு :முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை



*கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்து ஒன்று எண்ண*
*பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழும்*
*மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்பும் யான்*
*செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய் வினை தீர்த்தவனே!*

– பட்டினத்தார்

பொருள் : அடியார்களின் இருவினைகளையும் கண்கள் ஏதோ ஒரு பொருளை நோக்குகின்றன; மனம் ஒன்றை நினைத்து, மறுபடியும் ஏதோ ஒன்றை நினைத்து ஓடுகின்றது. பொய்யிலேயே புரண்டு கிடக்கும் எனது வஞ்சகமான நாக்கு எதை எதையோ பேசுகிறது;

வியர்வை நாற்றம், புலால் நாற்றம் வீசும் உடலானது ஏதோ ஒரு பரிச உணர்ச்சியை நாடுகிறது; காதுகளோ எதை எதையோ கேட்க விரும்புகின்றன; இப்படி எனது புலன்கள் அவற்றின் வழிச் சிதறி நிற்க, சிறியேன் செய்யும் பூசையை எப்படி ஏற்றுக் கொள்வாய்?

**வாழ்வியலுக்கான கருத்து** : ஞானத்திற்கு இன்றியமையாத சிவபூசை செய்யும்போது,ஐம்புலனும் மனமும் அலைந்து திரிதல் கூடாது. அப்படிப்பட்ட பூசையினால் பயனே இல்லை. சிவபூசை செய்யும் போது கருவி கரணங்களையும் அப்பூசை வழி நிறுத்த வேண்டும்; *''ஒன்றியிருந்து நினைமின்கள்''* என்றார் அப்பர் சுவாமிகள்.

# கலியுக வேங்கடேசப் பெருமாள் கோயில்
## தஞ்சாவூர்

*– திரு. அறந்தாங்கி சங்கர், சென்னை, 9444160161*

தஞ்சாவூரில் ஏராளமான சைவ, வைணவ ஆலயங்கள் இருக்கின்றன. அவற்றில் தஞ்சை நகருக்குள், தெற்கு ராஜ வீதியில் அமைந்துள்ள கலியுக வேங்கடேசப் பெருமாள் கோயில் பல வகைகளிலும் சிறப்புடன் விளங்குகிறது.

பெரும்பாலும் எல்லா கோயில்களிலும் மூலவர் சன்னிதிக்கு நேராகத்தான் ராஜகோபுரமும், நுழைவு வாயிலும் இருக்கும். ஆனால் இந்த ஆலயத்தில் வடக்கு நோக்கிய மூன்று நிலை ராஜ கோபுரம் ஒன்று தான் நுழைவு வழி. பெருமாள் கோயில்களில் எல்லாம் வடக்கு வாசல் என்பது வைகுண்ட ஏகாதசி அன்று “சொர்க்கவாசல்” என்ற பெயரில் திறக்கப்படும். இங்கே வடக்கு வாசலே நுழைவு வாயிலாக இருப்பதால் “நித்திய சொர்க்கவாசல்” என்று அழைக்கப்படுகிறது.

உள்ளே மகா மண்டபத்துள் வடக்கு கோபுர வாசல் வழியே நுழைந்தால், விநாயகர் – நாகர் சிலைகள் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. அதே வரிசையில் கருடாழ்வார் மேற்கு பார்த்த படியும், மூலவரை வணங்கிக் கொண்டிருக்கிறார். சதுர்புஜ வரதராஜப் பெருமாளுடன் லக்ஷ்மி தேவி அமர்ந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார். அருகிலேயே பூர்வ சஞ்சீவி ஆஞ்சநேயரும் காட்சி தருகிறார். அனுமன் மணிகட்டிய வாலை தலைக்கு மேல் உயர்த்தியபடி, இடது கரத்தில் கடிமலர் ஏந்தி, வலக்கரத்தால் ஆசி வழங்கியபடி வீற்றிருக்கிறார்.



வழக்கமாக இறைவனின் கருவறை முன்பாக இருக்கும் துவார பாலகர்கள் ஜெயன், விஜயன் என்றே அழைக்கப்படுகிறார். ஆனால் இத்திருகோயிலில் இருக்கும் துவார பாலகர்கள் “தீர்த்தர் – கிஷ்கிந்தர்” என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறார்கள்.

அஷ்ட லக்ஷ்மிகளின் உருவம் செதுக்கப்பட்ட மணிக்கதவினைத் தாண்டி, அர்த்த மண்டபத்துக் குள் சென்றால் கருவறைக்குள் மூலவர் கலியுக வேங்கடேசப் பெருமாள் அருள்புரிந்து வருகின்றார். சங்கு, சக்கரம் ஏந்திய தடக்கை யராக, வரதஹஸ்தம், கடிஹஸ்தத்தோடு நான்கு திருக்கரங்களுடன் புன்னகைத் தவழ அற்புதமாகத் திருக்காட்சியளித்து அருள் புரிந்து வருகிறார். இரு புறமும் ஸ்ரீதேவி, பூதேவித் தாயார்கள் நின்றருள் செய்கின்றனர். உற்சவ மூர்த்திகளும் அதே திருநாமத்துடன் திகழ்கிறார்கள்.








திருக்கோயிலின் ஈசான்ய மூலையில் சிறிது

உயர்ந்த தளத்தில் நவக் கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. நவக்கிரக சன்னிதி அறுங் கோண வடிவில் தனி விமானத்தின் கீழ் இருப்பது சிறப்பு. மேலும் நவக்கிரகங்கள் அனைத்தும் வரிசை மாறி அமைந்திருக்கின்றன.

வழக்கமாக நடுவில் இருக்கும் சூரியனுக்குப் பதிலாக சந்திரன் நடுவில் உள்ளார். அவருக்கு வலது புறத்தில் சாயா தேவி–உஷா தேவியுடன் சூரிய பகவான் இருக்கிறார். சனி தெற்கு நோக்கியும், அவரது நட்பு கிரகங்களான புதன், சுக்ரன் இரு புறமும் இருக்க நவக்கிரகங்கள் காட்சி தருகின்றனர். இவை வைணவ ஆலய விதிப்படி நிர்மாணிக்கப் பட்டதாகக் கூறப் படுகிறது.

இராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் பெருமாள் சன்னிதிக்கு நேரே கொடிமர மும், பலிபீடமும் உள்ளன.

அதை ஒட்டியுள்ள மண்டப மேற்கூரை யில் பன்னிரு ராசிகளும் பதிக்கப்பட்டுள்ளன. கொடி மரத்தின் முன் தங்களது ராசிக்குக் கீழ் நின்று பிரார்த்தித்துக் கொண்டால் நினைத்த பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கை. மேல் விதானத்தில் இராமாயண, நரசிம்ம அவதாரக் காட்சிகள் சிறிய புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன.

கோயிலை வலம் வரும் போது பிராகாரத்தில் மூலவரின் விமானத்தின் அருகே தலவிருட்சமான வில்வமரம் உள்ளது. சிவனுக்குரிய வில்வம் தல விருட்சமாக இருப்பது ஒரு சில திருமால் கோயில் களில் மட்டுமே. அந்த வகையில் இந்த ஆலயம் சிறப்பு மிக்கதாக விளங்குகிறது. நவநீத சேவையின் போது தஞ்சாவூரில் உள்ள 15 திருக்கோயில்களில் உள்ள பெருமாள்களும் கலந்து கொள்கின்றனர். அவர்களில் இத்தலப் பெருமாளும் ஒருவராவார்.





வெளிச்சுற்றில் அமிர்த்த வேங்கடேசர் தனிச் சன்னதியிலும், தைத்யமர்த்தினி என்ற பெயரில் காவல் தெய்வமான அஷ்டபுஜ துர்க்கை, அருகே பட்டாபிஷேக ராமர், ஆஞ்சநேயர், கஜ சம்ஹார காட்சி சிறிய சிற்பங்களாக வழிபடப் படுகின்றன. திருமணம் தடைப்பட்டோர், ஸ்வாமிக்கு திருமண உற்சவம் செய்து வைத்து, தோஷ நிவர்த்தி பெறுகிறார் கள். நவக்கிரக தோஷ பரிகாரத் தலமாகவும் இது விளங்குகிறது.





தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தைச் சேர்ந்த இவ்வாலயம் தினமும் காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருக்கும்.

# உடல் நலத்தைக் காக்கும் விரதம்

விரதம் என்பது உணவுப் பொருட்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் சாப்பிடுவதைத் தள்ளிப் போடுவது ஆகும். கொழுப்புச் சத்துள்ளவர்கள் தங்கள் கலோரிகளை எரித்து, ஆரோக்கியமான மனிதர்களாக மாற்ற வாரத்தில் இரண்டு நாட்களாவது விரதம் இருக்க வேண்டும். விரதம் இரத்த ஓட்ட அளவை மேம்படுத்துகிறது. நம் மனதையும் உடலையும் சுத்தப்படுத்துகிறது. பதட்டங்கள் மற்றும் மனச்சோர்வுகளைத் தவிர்க்கிறது. மேலும், விரதம் நமது செரிமானத் திறனை மேம்படுத்துகிறது. பசியை உருவாக்குகிறது.

பல ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மருத்துவர்கள், நமது நுரையீரலில் உருவாகும் நச்சுகளை அகற்ற, வாரத்திற்கு ஒரு முறையாவது விரதம் இருக்க அறிவுறுத்துகின்றனர். மகான்கள் பல வாரங்கள் மற்றும் மாதங்கள் கூட விரதம் இருந்து வாழ்ந்துள்ளனர். விஞ்ஞான ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் அனைத்து மக்களும் கடைபிடிக்க வேண்டிய சிறந்த விரதங்களில் ஒன்று ஏகாதசி விரதம் ஆகும். பக்தர்கள் அனைத்து ஏகாதசி நாட்களிலும் விரதம் இருப்பது நல்ல உடல் மற்றும் மன ஆற்றலைத் தருவதோடு, நமது கடந்த ஜென்ம பாவங்களை நீக்கி, நம் வாழ்க்கையில் மிக்க மனநிறைவினைத் தரும். ஏகாதசி நாளில் விரதம் இருப்பவர்கள், வைகுண்டம் அடைவர். வைகுண்ட ஏகாதசியின் விரதத்தின் முக்கியத்துவம் குறித்து புராணங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஏகாதசியின் போது கடைபிடிக்கப்படும் விரதத்தின் மூலம் பகவான் விஷ்ணுவை நாம் மகிழ்விக்க முடியும். அவர்களுக்கு மீண்டும் மறுபிறவி என்பது இல்லை. ஏகாதசி அன்று விரதம் இருப்பது ஒரு தொன்மையான பாரம்பரியமாகும். ஏகாதசி நாளில், நாம் முழு நாள் விரதம் இருக்கலாம். இல்லையெனில் அன்றைய தினம் பால், தயிர், பழச்சாறு மற்றும் பழங்களை உணவாக எடுத்துக் கொள்ளலாம். ஏகாதசி தினத்தன்று, துளசி நீரினை அருந்துவது மிகவும் புனிதமானச் செயலாகக் கருதப்படுகிறது. அவ்வாறு செய்வதன் மூலம், லக்ஷ்மி தேவியின் பரிபூரண ஆசிர்வாதத்தையும், அனுகிரஹத்தையும் நாம் பெறுலாம்.

எனவே ஏகாதசி தினங்களில் விரதம் இருந்து நல்ல ஆரோக்கியத்தைப் பெறுவோம். பகவான் ஸ்ரீலக்ஷ்மி நாராயணரின் அருள் பெறுவோம்.

**– திரு. ரா.ஹரிசங்கர், கும்பகோணம், 9940172897.**

## ஸப்தகிரி அக்டோபர் 2025 விடைகள்

1. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.
2. பூதத்தாழ்வார்.
3. தொல்காப்பியம்.
4. தூப்புல், காஞ்சிபுரம்.
5. தை மாதம், புனர்வசு நட்சத்திரம்.
6. ஒப்பிலியப்பன்.
7. மதுரகவியாழ்வார்.
8. ஐப்பசி மாதம்.
9. சுவாமி வேதாந்த தேசிகர்.
10. இருபத்து நான்கு.
11. பெரியவாச்சான்பிள்ளை.
12. குலசேகராழ்வார்.
13. மணிமேகலை.
14. ஐப்பசி மாதம், சதயம் நட்சத்திரம்.
15. நம்மாழ்வார்.



வினாடி வினா

## போட்டி எண். 39

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி ஜி.மேகாஸ்ரீ
   சேலம் பிரதான சாலை,
   கிருஷ்ணகிரி.
2. செல்வி கே.சண்டிகா
   மணியக்காரன் பாளையம்,
   கோவை.
3. செல்வன் கிருத்திக் வருண்,
   அனகாபுத்தூர்,
   சென்னை.

# திருநெடுங்குன்றம் கல்வெட்டுக்கள்

பேராசிரியர்.
ஜி. நரசிம்மன்,
அனந்தபுரம்,
90001 27115

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டம், நெடுங்குன்றம் எனும் திருத்தலத்தில் சுகப்பிரம்மரிஷி விருப்பத்திற்கு இணங்கி தீர்க்காசலேஸ்வரர் என்னும் திருப்பெயரால் இலிங்க வடிவமுற்ற சிவபெருமானுக்கு ஓர் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இதைப் போன்றே மாயோனாகிய எம்பெருமான் ஸ்ரீராமச்சந்திரனாய் லக்ஷ்மணன், சீதை மற்றும் அனுமனோடு சமேதரராய் சுகப்பிரம்ம மகரிஷிக்கு அருள்பாலித்த காட்சியை ஓர் ஆலய மாக அமைத்து மக்கள் வழிபட்டு வருகின்றனர். தீர்க்காசலேஸ்வரர் கோயில் பூமால் செட்டி குளத்திற்கு அருகே உள்ள நெடுஞ்சாலையின் மேற்கு திசையிலும், ஸ்ரீராமச்சந்திர பெருமாள் ஆலயம் மேலாண்ட ராஜ வீதியில் மேற்குப் புறத்திலும் அமைந்துள்ளது

நெடுங்குன்றத்தில் விளங்கும் இரண்டு திருக் கோயில்களைப் பற்றி மொத்தம் ஏழு கல்வெட்டுக் கள் காணப்படுகின்றன. நான்கு கல்வெட்டுக்கள் ஸ்ரீராமச்சந்திர பெருமாள் கோயிலிலும், மற்ற மூன்று கல்வெட்டுகள் தீர்க்காசலேஸ்வரர் கோயிலிலும் காணப்படுகின்றன.

## ஸ்ரீராமச்சந்திர பெருமாள் கோயில் கல்வெட்டுக்கள்

1. குரோதி வருஷம் மகர நாயற்று பூர்வ பட்சத்து துவாதசி திதி ரோகிணி நட்சத்திரம் வெள்ளிக்கிழமை கூடிய நன்னாளில் ஸ்ரீ வீரஅச்சுத தேவமகாராயர் ஆட்சி புரியும் காலத்தில் தென்னாரம் பட்டு என்ற ராமச்சந்திரா புரத்தைச் சேர்ந்த ஸ்ரீராமச்சந்திர பெருமாள் கோயிலைப் பராமரிக்கவும் திருவிழா நடத்தவும் இவ்வூரில் வாழ்ந்து வரும் வைஷ்ணவ ஆசாரிய பெருமக்களிடம் தானமாக வழங்கப்பட்டது

இக்கல்வெட்டு ஸ்ரீராமச்சந்திர பெருமாள் கோயில் முதல் பிராகாரத்தில் வடக்குச் சுவரில் அமைந்துள்ளது. இக்கல்வெட்டு தொடர் ஆண்டு 1544 டிசம்பர் திங்கள் 25ஆம் நாள் செதுக்கப்பட்டது.

ஸ்வஸ்தி ஸ்ரீமன்மஹா மாண்டலேஸ்வர ராஜாதிராஜ பரமேஸ்வர ஸ்ரீ வீரபிரதாப ஸ்ரீ வீர அச்சுத தேவ மஹாராயர் பிரிதிவிராஜ்யம் பண்ணி அருளா நின்ற சுஹ சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ சகர... 1544 மேல் செல்லா நின்ற குரோதி வருக்ஷத்து மகரநாயற்று பூர்வபக்ஷத்து துவாதசியும் சுக்கிர வாரமும் பெற்ற ரோகிணி நக்ஷத்திரத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மேற்குன்ற நாட்டில் நெடுங்குன்றத்து ஸ்ரீராமச்சந்திர பெருமாளுக்கு வெய்யற்பட்டு மல்லப்ப நாயக்கர் உள்ளிட்டார் திருவிளையாட்ட மாக விட்ட தென்னறம் பட்டுக்கு பிரதி நாமமான இராமச்சந்திர புரத்தை மல்லப்ப நாயக்கருள்ளிட் டாரும் இராமச்சந்திர பெருமாள் கோயில் தானத்தா ரும் இராமச்சந்திர பெருமாள் திருநாள் திருவத்தியெணம் செலுத்தக் கொள்...... க்கும்



## ஒற்றுமையே வலிமையாம்



**புதிய ஆத்திசூடி 10**

பாரத நாடு பல்வேறு மதங்கள், பல்வேறு சமயங்கள், பல்வேறு மொழிகள், பல்வேறு இனங்கள் ஆகியவற்றால் வேறுபட்டாலும், வேற்றுமையில் ஒற்றுமை என்பதே நமது நாட்டின் பண்பாடாகத் திகழ்ந்து வருகிறது. இதை பாரதி பல்வேறு பாடல்கள் மூலம் விளக்கிக் கூறுகிறார்.

''முப்பதுகோடி முகமுடையாள் - உயிர் மொய்ம்புறம் ஒன்றுடையாள் -இவள்
செப்பு மொழி பதினெட்டுடையாள் - எனில் சிந்தனை ஒன்றுடையாள்''

என்று அன்றைய மக்கள் தொகையான முப்பது கோடியைக் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார். அதுமட்டுமல்ல, ''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு'' இன்னும் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் விதமாக, ''எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம் எல்லோரும் இந்திய மக்கள்'' என்று அடுத்த தலைமுறையினரும் உணரும் வண்ணம் ஒற்றுமையின் வலிமையைப் பறைசாற்றுகிறார்.

''ஒற்றுமை வழியொன்றே வழியென்பது ஓர்ந்திட்டோம் நன்கு தேர்ந்திட்டோம்'' என்ற வரிகளால் இந்த தேசம் ஒன்றுபடுவது ஒன்றே சிறந்த வழி, அடுத்த வாரிசுகளின் வழியும் அதுவே என்று ஒற்றுமையின் சிறப்பை நமக்கெல்லாம் எடுத்துக் கூறுகிறார். ஆகவே, குழந்தைகளே, வீட்டிலுள்ள பெரியோர்களிடத்திலும், சகோதர சகோதரிகளிடத்திலும், சக மாணவர்களிடத்திலும் ஒற்றுமையுடன் இருந்து நாட்டை வலிமையுறச் செய்யுங்கள். இதுவே நமக்கு பாரதி காட்டும் வழி.

**- டாக்டர் கவிஞர் இரா. உமா பாரதி, சென்னை, மகாகவி பாரதியார் வம்சாவளி, 73389 97938**

படிக்கு ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு சருவத்தியென தர்மமாக விட்டு நிச்சயித்த ஹாகம் சைவ்ய ஸம்ஸை 92 இந்த ஹாரம், 52ம் ஹுூகு ஹுூளு கோத்திரத்து ஸுூத்திரத்து யஜீஸ் சகாத்யாயின வன்றீயுர் பரவஸ்த்து திருமலை அய்யங்கார் முதலான... (கல்வெட்டு எண்.761).

2. ஆனந்த வருடம் கழிந்த பின்வந்த இராட்சச வருடம் வைகாசி மாதம் 19ஆம் நாளன்று ஸ்ரீமத் இராமச்சந்திர பெருமாள் கோயில் காரியங்களுக்கு முதன்மையானவரான திருமலை ஐய்யங்கார் ஸ்ரீ பண்டாரத்தார், சோணாத்திரி (ஐயன் இவர் தஞ்சாவூர் சமஸ்தானத்தை ஆண்டு வந்த ரகுநாத நாயக்கரின் காரியதரிசி) ஆகிய மூவரும் வடுக வகையைச் சேர்ந்த தேவர் அடியாரில் அத்தகிரி என்பவளின் மகள் முத்துவுக்கு, வைகாசி மாசத்தில் நடக்கும் இராமச்சந்திர பெருமாள் திருவிழாவின் போது நூற்றுக்கால் மண்டபமான பெரியண்ணன் மண்டபத்தில் ஸ்ரீராமச்சந்திர பெருமாள் திருவிழாவிற்காக விடப்பட்ட கிராமங்களான தொற்றம்பட்டு, கொத்தம்பட்டு கிராமத்தில் ஏரிக்குக் கீழ் உள்ள ஸ்ரீராம வெள்ளையன் பிறவடை காணி நான்கு நிலத்திற்கும் அதற்குரிய சில்லறை மதிப்பு உள்பட பொற்காசு ஆறுடன் ஏரி எதுவாய் காணி ஒன்றுக்கு ஒரு பொன்னும் பயிர் செய்யும் காணி ஒன்றுக்கு ஒரு பொன்னும் மொத்தம் எட்டு பொன்னில் 5 பொன் நீங்கலாக மீதமுள்ள மூன்று பொன்னுக்கு மூன்று காணியும் இதற்குரிய குடியுரிமையும் முத்து எனும் விஜயராகவ மாணிக்கத்துக்கு மானியமாக வழங்கப்பட்டது.

இது நாளது முதற்கொண்டு புத்திர பௌத்திர பாரம்பரியமாக அனுபவித்துக் கொள்ள வேண்டியது. அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி எச்சோறு வரி, நீர்க்கூலி வரி முதலிய வரிகள் நீக்கப்பட்டது. பெருமாள் கோயிலில் பிரசாதம் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கல்வெட்டு பிரதான கோபுர வாயிலின் வலது பக்கத்தில் பொறிக்கப்பட்டு அமைக்கப்பட்டது. மேலும், இக்கல்வெட்டு வைகாசித் திங்கள் 19 ஆம் நாள் 1614ல் செதுக்கப்பட்டது.

தொடரும்...

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**
**பக்தர்களின் கவனத்திற்கு**

- தரிசன வரிசையில் செல்லும்போது முன்னால் செல்பவர்களைத் தள்ளிக் கொண்டும், முந்திக் கொண்டும் ஓடாதீர்கள்.
- கோவிந்த நாமத்தைத் துதித்தபடி தரிசன வரிசையில் செல்லுங்கள்
- அன்னப் பிரசாதம் பெறுமிடத்திலும் வரிசையைக் கடைபிடியுங்கள்.
- பெண்கள், குழந்தைகள் மற்றும் மூத்தகுடி மக்களுக்கு முன்னுரிமை அளியுங்கள்

# சண்டேசர் சிற்பங்கள்



யமசண்டிகேஸ்வரர் - திருவாரூர்



சதுர்புஜ சண்டிகேஸ்வரர்
தியாகசமுத்திரம்
சுவாமிமலை அருகில்




சண்டேச அனுக்கிரக மூர்த்தி
குறுஞ்சிற்பம் - காமரசவல்லி



சதுர்முக சண்டர் - தாராசுரம்



சதுர்முக சண்டர் - திருமீயச்சூர்



சண்டேச அனுக்கிரக மூர்த்தி
சிற்பம் கும்பகோணம் மகாமககுள மண்டபம்

## சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்


**திரு.ப.சரவணன்,**
**குடந்தை,**
**86108 19456**


கைலாயத்தில் பரமனின் திருவடியை நித்தம் வணங்கி மகிழும் சிவகணங்களின் தலைவர் நந்தி எம்பெருமான் ஆவார். அதுபோல் பூலோகத்தில் பாமரரும் வணங்கி மகிழும் பஞ்ச மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீசண்டிகேஸ்வர பெருமான் சிவாலயங்களில் தலைமை காப்பாளர் ஆவார்.

ஆதலால் சிவாலயங்களில் சிவபெருமானை வழிபட ஸ்ரீநந்தியம் பெருமானிடம் அனுமதி பெற வேண்டும் என்பதும், வழிபாடு முடிந்ததும் நிறைவில் சண்டிகேச பெருமானிடம் விடை பெறவேண்டும் என்பதும் சைவ சமய வழிபாட்டு முறையாகும்.

### ஸ்ரீ சண்டீசர் வடிவங்கள்

சிவாகம புராணங்களில் ஒவ்வொரு யுகத்திற்கும் ஒவ்வொரு சண்டிகேசுவரர் உள்ளார். அதன்படி கிருதயுகத்தில் பிரசண்டர் எனவும், திரேதாயுகத்தில் விக்ராந்த சண்டர் எனவும், துவாபரயுகத்தில் படைப்புக் கடவுளான பிரம்ம தேவர் சண்டிகேசுவர பதவியில் இருந்துள்ளார். அதனால் இவரை ஆதிசண்டர், விபுசண்டர், பிரம்மசண்டர், சதுர்முகசண்டர் எனவும், கலியுகத்தில் கலியுக சண்டிகேசுவரர் எனவும் அழைக்கப்படுகிறார். மேலும், சிவாலயங்களில் – த்வனிசண்டர் தேவி ஆலயங்களில் சண்டேஸ்வரி, சூரியன் ஆலயங்களில் தேஜஸ் சண்டர், விநாயகர் ஆலயத்தில் கும்பசண்டர், சுப்ரமணியர் ஆலயத்தில் சுமித்ரசண்டர் எனவும் அழைக்கப்படுகிறார். (நன்றி : திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, தெய்வத் திருமேனிகள் நூல்)

### ஸ்ரீசதுர்முக சண்டீசர்

மிக அரிதான வகையில் சில ஆலயங்களில் மட்டும் காணப்பெறும் மேற்காணும் சதுர்முக ஸ்ரீசண்டீசர் சிற்பங்கள் பிரம்மதேவனைப் போல் நான்கு முகம் கொண்ட திருவுருவ வடிவாகும். இவ்வடிவம் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் தாராசுரம், திருமீயச்சூர், திருலோக்கி சுந்தரம், கணபதி அக்ரஹாரம், திருவாவடுதுறை, சிதம்பரம் ஆகிய தலங்களில் உள்ளது. இதனை போல் மிக அரிதான வகையில்

காணப்படும் நான்கு கரங்கள் உடைய (சதுர்புஜ) சண்டிகேஸ்வரர் சிற்பங்கள் தியாகசமுத்திரம் (சுவாமிமலை), திருமயிலாடி (சீர்காழி), வடரங்கம் (திருச்சி) போன்ற சில தலங்களில் உள்ளதும் மற்றும் தஞ்சை அருங்காட்சியகத்தில் உள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### யம சண்டிகேஸ்வரர்

யமதர்மராஜன் என்று அழைக்கப்படும் தர்மத்தின் நாயகனான யமதர்மனும் சண்டிகேசுவரர் பதவியில் இருந்தவர். தமிழகத்தில் உள்ள திருவாஞ்சியம் வாஞ்சிநாதசுவாமி கோயில், திருவாரூர் தியாகராசர் கோயில்களில் யம சண்டிகேசுவரராக உள்ளார். இங்கு இவரை “யம சண்டிகேசுவரர்” என்று அழைக்கின்றனர்.

மேலும், தமிழகத்தில் உள்ள சில சிவாலயங்களில் பல சிறப்பு வடிவுடைய சண்டிகேஸ்வரர், சண்டிகேஸ்வரி எழுந்தருளி உள்ளதும், அதுபோல் இரண்டு அல்லது மூன்று சண்டிகேஸ்வரர் ஒன்றாக உள்ளதும் கூடுதல் சிறப்பாகும்.

### சண்டீசர் அவதாரத் தலம் மற்றும் முக்தித் தலம்

தஞ்சை மாவட்டம் – திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாள் அஞ்சல் – சேய்ஞலூரில் (சேங்கனூர்) அருள்மிகு ஸ்ரீசத்தியகிரீஸ்வரர் திருக்கோயில் உள்ளது. இத்தலத்தில் வாழ்ந்து வந்த காசிப கோத்திர அந்தணன் எச்சதத்தன் மனைவி பவித்திரை தம்பதியின் தவப்புதல்வனாக விசாரசருமர் எனும் திருநாமத்துடன் கலியுக சண்டீசர் திருவவதாரம் செய்தார் .

அதனைத் தொடர்ந்து விசாரசருமர் தனது பால பருவத்தில் மணலால் லிங்கம் செய்து ஆத்மாத்த சிவ பூஜையில் ஈடுபட்டார். இதனைக் கண்ட ஈசன் தான் சூடி மகிழ்ந்த கொன்றை மாலையை இவருக்குச் சூடி சண்டீசர் பதவி தந்து இனி எனக்கு வழங்கப்படும் வஸ்திரம், மலர் மாலைகள் திருவமுது அனைத்தும் உனக்கும் தரப்படும் என அருளாசி நல்கினார்.

குறிப்பு; வைணவ சமய ஆசாரியர் பெரிய வாச்சான் பிள்ளை அவதாரத் தலம் இது (சேங்கனூர்) என்பது கூடுதல் தகவலாகும். அருள்மிகு ஸ்ரீபாலுகந்தநாதர் திருக்கோயில் திருவாய்ப்பாடியில் (ஆய்ப்பாடி) உள்ளது.



திருமலை திவ்ய திருத்தலத்தில் கோவிந்தன் குடி கொண்டு இருப்பதால் எந்நேரமும் கோவிந்த நாம ஸ்மரணை செய்தல் வேண்டும். அதே போன்று அனைவரையும் “கோவிந்தா ” என்றே அழைத்திடுங்கள்.

இத்தலத்தில் ஈசனின் அனுக்கிரகம் பெற்ற சண்டீசர் தனது குடும் பத்தாருடன் முக்தி பெற் றார் என்பது கலியுக சண்டேசப் பெருமானின் புராண வரலாறு ஆகும்.

இவ்விரண்டு ஆலயங்களும் சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் அருகருகே அமைந்துள்ளது கூடுதல் சிறப்பாகும்.

சிவாலயங்கள் தோறும் சிவ சிந்தனை யுடன் யோக நிலையில் எழுந்தருளியுள்ள 63 நாயன்மார்களில் ஒருவரான அருள்மிகு கலியுக சண்டிகேஸ் வரரை சிவ வழிபாட்டின் நிறைவில் அமைதியாக வணங்கி விடை பெற வேண்டும் என்பது ஐதீகம் .

**ஸ்ரீ சண்டிகேஸ்வர நாயனார் வரலாற்றை எடுத்து இயம்பும் குறுஞ்சிற்பக் காட்சி - தாராசுரம்**



ஸ்ரீ:பதியான சர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் தன் நிர்ஹேதுக க்ருபையால்(காரணமற்ற அருள்) உலகத்தையும், உலகில் உறைகின்ற உயிரினங்களையும் காத்து வருகிறான். எம்பெருமானை அடைய யாகம், ஜபம், தவம் போன்றவைகள் உபாயமாக இருந்தாலும் பக்தியே சிறந்த வழியாக நம்முடைய முன்னோர்களால் காட்டப்பட்டு வருகிறது. வேதம் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றி பரக்கப் பேசுகிறது. காரணம் வேதம் என்பதே நாராயணன் என்கிறது கீழ்க்கண்ட வாக்யம்.

வேதோ நாராயண ஸாக்ஷாத்

நம் போன்றவர்களால் வேதம் பயின்று குருகுலவாசம் இருந்து கற்க முடியாது. அதனாலேயே ஸ்ரீஹரியானவன் உலகில் ஆழ்வார்களைப் படைத்து பாசுரங்கள் பாடி அவர்களும், அதனைப் படிக்கும் மனிதர்களும் உய்ய வழி வகுத்தான். அவைகளுள் திருப்பாண் ஆழ்வார் அருளிய பிரபந்தம் அமலனாதி பிரான் பற்றி இங்கே காண்போம்.

ஆதிசங்கரர் தாம் அருளிய மனீஷா பஞ்சகம் என்ற நூலில் ஒருவரின் ஞானத்தையிட்டே உயர்வு தாழ்வுகளைக் காண வேண்டுமே தவிர, பிறப்பால் தாழ்வு காண்பது பெரிய பாவம் என்கிறார்.

திருப்பாணாழ்வார் திருச்சியில் உள்ள உறையூரில் நான்காம் வர்ணாஸ்ரமத்தில் பிறந்தவரானாலும் ஸ்ரீஹரியின் மீது கொண்ட அளவற்ற பக்தியே அவரை எம்பெருமானிடம் சேர்ப்பித்தது. ஸ்ரீரங்கத்தில் திருவரங்கனுக்கு கைங்கர்யம் புரியும் லோக சாரங்க முனிவர் பெருமாள் திருமஞ்சனத்துக்கு தீர்த்தம் எடுக்கப்போகும் போது காவிரியின் எதிர்கரையில் திருப்பாணாழ்வார் எம்பெருமானை மனம் உருகிப் பாடுகிறார். அப்படி உருகி பாடும் போது அந்தப் பாசுரம் காற்றில் கலந்து எம்பெருமான் திருமஞ்சன குடத்தில் சேர்ந்து மணம் வீசும்.

ஒருநாள் திருப்பாணாழ்வார் பாடிக் கொண்டே லோக சாரங்க முனிவர் பக்கத்தில் வர முனிவர் மிக கோபம் கொண்டு ஆழ்வாரை தாக்கி விட "அடியார் துன்பத்தை அரங்கன் பொறுக்க மாட்டான்" என்பதற்கு இணங்க அசிரீரியாக உறைத்தான். லோக சாரங்கரே என் பக்தனான பாணனை உமது தோளில் சுமந்து கொண்டு கோயிலுக்கு வந்தால்தான் கதவு திறக்கும் என்று கூறியவுடன் முனிவர் தன் தவறை உணர்ந்து



# பாணன் பனுவல்கள் பரமபதம் அருளும்

– திரு.கே. ஸ்ரீநிவாசன்,
மன்னார்குடி, 95971 32238

அவரை தன் தோளில் சுமந்து கொண்டு வருகின்றார். அப்போது ஆழ்வார் அருளியதுதான் அமலனாதி பிரான் என்ற பாசுரம் ஆகும். அதன் விளக்கத்தை காண்போம்.

இப்பாசுரத்தில் முதல் பாசுரத்திலும் மூன்றாம் பாசுரத்திலும், திருவேங்கடவனைச் சரணம் புகுந்து பின், மற்ற எல்லா பாசுரங்களிலும் திருவரங்கத் தானைச் சரண்புகுகின்றார். இத்திவ்ய தேசத்தில் ஆழ்வார் அரங்கனிடம் தீர்க்க சரணாகதி செய்கிறார்.

“ஓம்” என்கின்ற ப்ரணவம் அகார, உகார, மகார ஸப்தங்களைத் தன்னுள் அடக்கியது. ‘அ’ என்பது அகார வாக்யனான நாராயணன். ‘உ’ என்பது உகார வாக்யனான புருஷகார பூதையான பெரிய பிராட்டி பற்றி கூறுவது. ‘ம’ என்பது, காக்கப்பட வேண்டிய வனான ஜீவாத்மாக்களைப் பற்றி கூறுவது.

பாணரின் முதல் பாசுரமே *‘‘அமலனாதிபிரான் அடியார்க்கு......உள்ளன ஒக்கின்றதே...’’* என்றே அருளினார். முதல் எழுத்தான ‘அ’ ஸ்ரீ:பதியான ஹரியைக் குறிக்கின்றது. இரண்டாவது பாசுரமான *‘‘உவந்த உள்ளத்தனாய் உலகமளந்து அண்ட முற...... சென்றதாம் என் சிந்தையே’’* மூன்றாவது பாசுரம் *‘‘மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள்... அடியேனுள்ளத்தின்னுயிரே’’* இந்த மூன்று பாசுரங்களிலும் ‘அ’கார, ‘உ’கார, ‘ம’காரமான பிரணவம் தொனிக்கிறது.

நான்காவது பாசுரம்: *‘‘சதுரமாமதிள் சூழ் இலங்கைக்கு இறைவன் தலைபத்து... என் உள்ளத்துள் நின்று உலாகின்றது’’* இதில் ‘ச’ என்ற முதல் எழுத்து உடன் (ie) and– என்பதை உணர்த்துகின்றது. ஐந்தாவது பாசுரமான *‘‘பாரமாய பழவினை பற்றறுத்து... அடியேனை ஆட்கொண்டதே’’*. ஆறாவது பாசுரமான *‘‘துண்ட வெண்பிறையான் துயர் தீர்த்தவன்... அடியேனை உய்யக் கொண்டதே’’*, ஏழாவது பாசுரமான *‘‘கையினார் சுரிசங்கு அனல்ஆழியர்... என்னைச்சிந்தை கவர்ந்ததுவே’’*. எட்டாவது பாசுரமான *‘‘பரியனாகி வந்த அவுணன் உடல் கீண்ட ... என்னை பேதமை செய்தனவே’’*. ஒன்பதாவது பாசுரமான, *‘‘ஆலமாமரத்தின் இலைமேலொரு பாலக னாய் ...என் நெஞ்சினையே’’*. பத்தாவது பாசுரமான *‘‘கொண்டல் வண்ணனைக் கோவலனாய்... கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே’’* என முடித்தார்.

இதில் முதல் மூன்று பாசுரங்களினால் பிரணவர்த்தம் அதாவது “அ, உ, ம” காட்டப்பட்டது. பிறகு ஐந்தாவது பாசுரம் முதல், பாசுரத்தின் முதல் எழுத்துக்களை நோக்க எட்டாம் பாசுரம் வரையில் “பா, து, கை” என்றே தொடங்கும். பிரணவப் பரம் பொருளானவன் பாதுகையே நம் போன்றவர்களை உய்விக்கும் என்று பொருள்.

ஒன்பதாம் பாசுரத்தில் திருமால் ஊழிமுடித்து ப்ரளயஜலத்தில் வடபத்ரசாயியாகத் தோன்றியதை உணர்த்தி பின் கடைசி பாசுரமான “கொண்டல் வண்ணனை” என்ற பாசுரம் கர்பக்கிரஹத்தில் வெங்கலத் தூண் பக்கம் சென்ற உடன் திருவரங்கனைக் கண்டு *‘‘அவனை கண்டகண்கள் மற்ற ஒன்றினைக் காணாவே’’* என்று முடிந்தவுடன் அவர் ஜோதியாக எம்பெருமானின் உள்கலந்தார். ஆக, திருப்பாண் ஆழ்வார் பாடிய அமலனாதிபிரான் தினமும் அனுசந்திக்க நமக்கு பரமபதத்தை அருள்வான் என்பதாலே பாணன் பனுவல்கள் பரமபதம் அருளும் என்று நாமும் நம் அரங்கனைத் துதிப்போமாக.



## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*ஸ சங்க$_2$சக்ராங்கநபுண்ட்$_3$ரயாக$_3$மந்த்*
*ராம்ஸ்தத$_3$ர்தை$_2$ரபி மந்த்ரரத்நம் ।*
*அந்யாம்ச்ச தத்ரோபதி$_3$தே$_3$ச மந்த்ராந்*
*ராமாநுஜாசார்யவராய தஸ்மை ॥* (45)

**1)சங்கசக்ராங்கனம், 2) ஊர்த்வ புண்ட்ரதாரணம், 3) தாஸ்யநாமம், 4) யாக ஸம்ஸ்காரம், 5) மந்த்ரரத்நமாகிற த்வயத்தையும் (திருவஷ்டாக்ஷரம் முதலிய) மற்ற மந்திரங்களையும் பொருளோடு உபதேசித்தலாகிற மந்த்ரஸம்ஸ்காரம் என்னும் பஞ்சஸம்ஸ்காரங்களையும் பெரிய நம்பி இராமாநுஜருக்கு அங்கேயே செய்தருளினார்.**

– “ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது

# குறுக்கெழுத்துப் புதிர் -113

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | ■ | |
| | | | | | | | | | | | 2 |
| | | | 3 | | | | | | | | |
| | | | 4 | | | | | | | | |
| | | | | | | | 5 | 6 | | | |
| | | | | 7 | 8 | | 9 | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | 10 | | | | | |
| | | 11 | | | | ■ | ■ | | | | |
| | 12 | | | | | | | | 13 | | |
| | | | | | | | | | | 14 | |
| ■ | | | | | | | | | | | 15 |

தொகுப்பு : திருமதி தமிழரசி, வல்லம்.

புதிருக்கு விடை அறிய 37ம் பக்கம் பார்க்கவும்...

## இடமிருந்து வலம்

01. சபரி மலையில் ஆண்டுக்கொரு முறை காணுகின்ற தீப தரிசனம்...(10)
03. மன்னார்குடியில் ராஜகோபால ஸ்வாமி அளிக்கின்ற நவநீத சேவை...(8)
04. திருவாரூரில் நடைபெறுகின்ற ரதோத்ஸவம்...(7)
12. மதுரையில் சொக்கநாதர் மண் சுமந்த திருவிளையாடல் வைபவம்...(8)

## வலமிருந்து இடம்

02. வலங்கைமான் மாரியம்மனிடம் பக்தர்களின்பிணவேட விழா...(10)
05. திருவரங்கத்தில் வைகுண்ட ஏகாதசியில் நடைபெறுவது...(4) வாசல் திறப்பு விழா.
14. திருநெல்வேலி அம்பாள்...(11) த்தவாரி விழா.
15. இருக்கன்குடி தல நாயகிக்கான விழா...(11)

## மேலிருந்து கீழ்

01. நயினார் கோயில் ஸ்ரீசௌந்தர நாயகி அம்மனுக்கு நடக்கின்ற வைபவம்...(10)
04. ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள் தாயாருக்கு நடத்தப்படுவது...(6) பெருவிழா.
06. தமிழ் ஆண்டின் முதல் மாதத்தில் மதுரையில் நடக்கின்ற விழா...(6)
07. வடலூரில் மகர மாதத்தில் நடைபெறுவது ...(5) திருவிழா.
08. திருச்செந்தூரில் கந்தசஷ்டியன்று செந்திலாண்டவர் புரிவது...(4) ஹாரம்
09. நாகை நெல்லுக்கடை மாரியம்மன் ஆலயத்தில் நிகழ்வது ...(3) சாற்றும் திருவிழா.

## கீழிருந்து மேல்

10. மதுரை வைகை ஆற்றில் நடைபெறுவது ...(4) இறங்கும் வைபவம்.
11. திருத்தணியில் ஆடிக்கிருத்திகை முன்னிட்டு நடைபெறுவது...(8)
12. சங்கரன்கோயில் ஸ்ரீகோமதியம்மன் அளிக்கின்ற ...(9) சனம்.
13. பிள்ளையார் பட்டி கற்பக விநாயகர் ஆலயத்தில் ஆண்டுதோறும் நடைபெறுவது விநாயகர்...(7)
14. ஆண்டுக்கொரு முறை திருவண்ணாமலையில் நிகழும் ஜோதி தரிசன வைபவம்...(9)
15. ஸ்ரீவைகுண்டம் திருத்தலத்தில் சடகோபருக்கு நடத்தும் விழா...(12)




சர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ| அஹம் த்வாம் ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சு ச:||

பகவத் கீதை 18-66

# அனந்தாழ்வான் அருளிச்செய்த ஸ்ரீகோதா சதுச்லோகீ




மகளீர் விரதமிருந்து பரந்தாமனை அடைவதற்கான பக்தி நெறியை திருப்பாவையில் 30 பாசுரங்களால் ஆண்டாள் அருளிச் செய்து உள்ளாள்.

ஆண்டாள் மீதும், திருப்பாவை மீதும் அதிக ஈடுபாடு கொண்டவர் இராமாநுஜர். ஆகையால் இராமாநுஜர் "திருப்பாவை ஜீயர்" என்றும் அழைக்கப்படுகிறார்.

திருப்பாவை ஜீயரின் சீடர்களில் ஒருவரே அனந்தாழ்வான். ஆண்டாள் மீது தான் கொண்ட பக்தியின் வெளிப்பாடே இவர் அருளிச்செய்த "ஸ்ரீகோதா சதுச்லோகீ" ஆகும்.

ஸ்ரீகோதா சதுச்லோகீ என்பது நான்கு சுலோகங்களைக் கொண்டது. இதில் ஆண்டாளின் பெருமைகளைக் கூறுவதோடு, ஆழ்ந்த பக்தி, அன்பு மற்றும் எம்பெருமானிடம் கொண்ட தெய்வீக உறவினையும் மிகவும் அழகாக விவரிக்கின்றார்.

மேலும், மகளீர் தங்களுடைய வாழ்க்கையை இறைவனிடத்தில் எவ்விதத்தில் அர்ப்பணிக்க வேண்டும் என்பதை விளக்கு வதே இந்த ஸ்ரீகோதா சதுச் லோகீ ஆகும். அதோடு நமக்குள் நம்பிக்கை அளிப்பதோடு, இன்னல் களைத் தாங்கிடும் ஆற்றலையும் அளிக்க வல்லது. வேதங்கள், உபநிடதங்களுக்கு ஒப்பானதாகவும் போற்றப்படுகிறது.

# ஸ்ரீகோதா சதுச்லோகீ

*சக்ரே கோதா சதுச்லோகீம் யோ வேதார்த்தப்ரகர்ப்பிதாம்*
*ஸ்ரீவேங்கடேச ஸத்பக்தம் தமநந்தகுரும் பஜே.*

வேதக்கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட கோதா சதுச்லோகியை அருளிச் செய்த அனந்தாழ்வானைத் துதிக்கிறேன்.

*நித்யாபூஷா நிகமசிரஸாம் நிஸ்ஸமோத்துங்க வார்த்தா*
*காந்தோ யஸ்யா: கசவிலுலிதை: காமுகோ மாவ்யரத்நை:*
*ஸூக்த்யா யஸ்யா: ச்ருதிஸுபகயா ஸுப்ரபாதா தரித்ரீ*
*ஸைஷா தேவீ ஸகலஜநநீ ஸிஞ்சதாம் மாம பாங்கை: (1)*

யாருடைய வாக்கானது வேதாந்தத்திற்கு நித்ய அலங்காரமாகத் திகழ்கிறதோ, யாருடைய காதலன் அவள் குழலில் சூடிக் களைந்த மாலையில் ஆசையுடையவனாகத் திகழ்கிறானோ, யாருடைய திருவாக்குளால் இப்பூவுலகம் நல்விடிவு பெறுகிறதோ, அப்படிப்பட்ட கோதா தேவியானவள் அடியேனைத் தன் கடாக்ஷத்தால் நனைக்க வேணும்.

*மாதாசேத்துலஸீ பிதா யதி தவ ஸ்ரீவிஷ்ணுசித்தோ மஹாந்*
*ப்ராதா சேத் யதிசேகர: ப்ரியதம: ஸ்ரீரங்கதாமா யதி*
*ஜ்ஞாதாரஸ்தநயாஸ்த்வதுக்திசரஸஸ்தன்யேனஸம்வர்திதா:*
*கோதாதேவி கதம் த்வமந்யசுலபாஸாதாரணா ஸ்ரீரஸி (2)*

கோதாதேவியே! உமது தாயோ திருத்துழாய்ச் செடி; தந்தையோ பெரியாழ்வார்; தமையனாரோ யதிராஜர்; கணவனோ ஸ்ரீரங்கநாதன்; பிள்ளைகளோ உமது திருவாக்குகளாகிற முலைப்பாலைப் பருகும் ஞானிகள்; இவ்வளவு பெருமைகள் பெற்றிருந்தும் சாதாரணமானவர்களுக்கும் கிட்டும்படியானவராக எப்படி இருக்கிறீர்.

*கல்பாதௌ ஹரிணாஸ்வயம் ஜநஹிதம் த்ருஷ்டவேவ ஸர்வாத் மநாம்*
*ப்ரோக்தம் ஸ்வஸ்ய ச கீர்த்தநம் ப்ரபதநம் ஸ்வஸ்மை ப்ரஸூ நார்ப்பணம்*
*ஸர்வேஷாம் ப்ரகடம் விதாதுமநிஸம் ஸ்ரீதந்விநவ்யே புரே*
*ஜாதாம் வைதிகவிஷ்ணுசித்ததநயாம் கோதாம் உதாராம் ஸ்தும: (3)*

கல்பத்தின் ஆதியில் எம்பெருமானால் உலகோர்கள் உய்தல் பொருட்டு அவனைப் பாடுதல், அடிபணிதல், அர்ச்சனை செய்தல் சொல்லப்பட்டது. இவற்றை உலகோர்கள் அறியும்படி செய்வதற்காக ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் திருமகளாக வந்து அவதரித்த உதார குணமுள்ளவளான கோதாதேவியை வணங்குகிறோம்.

*ஆகூதஸ்ய பரிஷ்க்ரியா மநுபமாமாஸேசநம் சக்ஷுஷோ:*
*ஆநந்தஸ்ய பரம்பராமநுகுணாம் ஆராமசைலேசிது:*
*தத்தோர்மத்யகிரீடகோடிகடித ஸ்வோச்சிஷ்டகஸ்தூரிகா*
*மால்யாமோத ஸமேதாத்மவிபவாம் கோதாம் உதாராம் ஸ்தும: (4)*

திருமலையப்பனின் திருவிளையாடல்களுக்கு அழகூட்டுபவளும், காணும் கண்களுக்கு மகிழ்ச்சியை அளிப்பவளும், அவனுக்கு எல்லா வகையாலும் தகுந்தவளும், அவனது மார்விலும், சுடர்முடியிலும் தான் சூடிக் களைந்த மாலைகளின் நறுமணத்தைப் பரப்புபவளும், உதாரகுணமுள்ளவளுமான கோதா தேவியைத் துதிக்கிறோம்.



30–10–2025 அன்று திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெற்ற புஷ்ப யாகம். புஷ்ப யாகத்திற்காக பல வகையான மலர் கூடைகளைச் சுமந்து வந்த தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு.அனில்குமார் சிங்கால் ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் தி.தி.தே. உயர் அதிகாரிகள்



17–10–2025 முதல் 19–10–2025 வரை நடைபெற்ற ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவத் திருக்காட்சி



26–10–2025 அன்று திருமலையில் உள்ள பாபவிநாசனம் நீர் தேக்கம் அதன் முழு கொள்ளளவு எட்டியதை ஒட்டி அதற்கு சிறப்பு பூஜை செய்த தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பி.ஆர்.நாயுடு அவர்கள்



31–10–2025 அன்று திருமலையில் உள்ள மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அன்னதானக்கூடத்தில் நடைபெற்ற ஆயுதபூஜையில் பங்கு கொண்ட செயலாட்சித்தலைவர் திரு.அனில்குமார் சிங்கால் ஐ.ஏ.எஸ். அவர்கள்



18–10–2025 அன்று திருப்பதியில் உள்ள தி.தி.தே. அச்சகத்தில் நடைபெற்ற ஆயுத பூஜையில் பங்கு கொண்ட தி.தி.தே. இணைச் செயலாட்சித் தலைவர் திரு. வி.வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள், அச்சக துணைச் செயலாட்சித்தலைவர் திரு. ஆர்.வி.விஜயகுமார் அவர்கள், ஸப்தகிரி பிரதான ஆசிரியர் (பொறுப்பு) டாக்டர் வி.ஜி.சொக்கலிங்கம் அவர்கள்

ஸ்ரீவில்லிபுத்தூரில்
மார்கழி மாதத் திருவிழா

# ஆண்டாள் நீராட்டோற்சவம்





*இன்றோ திருவாடிப்பூரம் எமக்காக அன்றோ*
*இங்காண்டாள் அவதரித்தாள் - குன்றாத*
*வாழ்வான வைகுந்தவான் போகந்தன்னை யிகழ்ந்து*

என்று ஸ்வாமி ஸ்ரீமணவாள மாமுனிகள் கூறியது போல நம்மை உஜ்ஜீவித்து வழிகாட்டு முகமாக இங்கே அவதரித்து தானே வாழ்ந்து காட்டினாள் தாயார் ஆண்டாள். அவள் “எல்லாம் எம்பெருமான்” என்றே அனுபவித்ததால், “மாலையைச் சூடிக் கொடுத்தவள். சூடிக் கொண்டவள் அல்லள்”. எல்லாம் கண்ண னுக்கு எப்படி இருக்கும் என்று சூடி அழகு பார்த்து அனுப்பி வைத்தாள். மேலும், ஆயிரம் ஆண்டுக்குப் பிறகும் நாம் அனுபவிக்க எழுதி வைத்தாள். தனது திருமொழியில்,

*கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு*
*கோவிந்தனென்பதோர் பேரெழுதி*
*வித்தகன் வேங்கடவாணனென்னும்*
*விளக்கினிற் புகவென்னை விதிக்கிற்றியே*

என மன்மதனைக் கேட்கிறாள். மன்மதன் இருபாலர் விஷயத்தில், இப்படி “கோவிந்தன்” என்ற பேரெழுதி எய்தால், அந்தக் கோவிந்தன் நாயகனாக வாய்ப்பானாம். அதனால் அவன் பேரெழுதி காமன் கணைகள் தொடுக்க வேண்டும் என்று கேட்கிறாள். இப்படி ஓர் பிற தெய்வத்தைக் கேட்கலாமோ என்றால், “கிடைக்கும் பொருள் பெரிது. வேண்டும் பொருள் பெரிது”. அதனால் கூடும் என்பர் பெரியோர்.

இப்படி வேங்கடவன் மேல்கொண்ட பக்தி விரிவடைந்து கொண்டே போகிறது. தன்னுடைய அவதாரமே “எம்பெருமான் திருக்கரம் பற்ற வேண்டுமென்று தெளிவாகக் காட்டுகிறாள்”. வானிடை வானவர்கட்காக வேள்வியில் கொடுத்த அவிசை நரி தூக்கிப் போனாற்போல, அற்ப மானிடவர்க்கு ஆளாகாமல் தன் பிறவிப் புண்ணியம் ஆழியும், சங்கும் ஏந்திய அண்ணலையே சேர வேண்டும் என்கிறாள்.

வேங்கடவனுக்கு மேகத்தைத் தூது விடுகிறாள். ஒரு அற்புதமான பதிகம் இது. வானம் நீலம் போர்த்தி உள்ளது. இந்த வர்ணனை நாக்கில் ரசம் ஊறச் செய்கிறது. அப்படிப்பட்ட வானைப் போர்த்திய மேகங்கள் தெள்ளிய நீர் பாயும் வேங்கடத்துக்குச் சென்று விட்டவனுக்கு அவனைக் காணாமல் கண்கள் வடிக்கும் நீர் மார்பை நனைக்க நானிருக்கும் நிலையை எடுத்துக் கூறுங்கள்.

நான் கோவிந்தன் குணம்பாடி ஆவி காத்து இருப்பேனே “என் உயிர் தரிப்பேனே” என்று தான் இருப்பது அவனுக்காக என்று முன்னே சொன்னவள், தான் உயிர் வாழ்வதுவும் அவன் நினைவாலே என்று உறுதி கூறுகிறாள். இவளது துடிப்பு நம் மானிட சாதிக்கு அப்பாற்பட்டது. **“உலங்கு உண்ட விளாங்கனிபோல்”** என்று அவள் கூறும்போது, உலங்கு என்ற ஒரு பூச்சி விளாம் பழத்தை உண்டு விடும். வெளியே ஓடு அப்படியே இருக்கும். ஆனால், உள்ளே பழம் எதுவும் இருக்காது. அதுபோல் தான் மேனியுடன் வாழ்கிறேனே ஒழிய, உள்ளே ஜீவன் ஏதும் இல்லை. என்னை அப்படி **“உள் மெலியப் புகுந்து என்னை ஆட்கொண்டு விட்டான் அந்த நாரணன்”** எனக் காட்டுகிறாள். அப்படி திருவேங்கடன்பால் தாயார் ஆண்டாளின் ப்ரேமை அளவிடற்கரியது.

அவனையடைய அவள் முன்னர் கோபஸ்த்ரீகள் நடத்தியது போல் நோன்பு நோற்று அடைய முயல்கிறாள். மார்கழி மாதம் 30 நாட்களும் நீராட்ட உத்ஸவ திருமஞ்சனம் நடத்தி வந்தால், உத்ஸவர் திருமேனிக்கு குறை வந்துவிடும் என்று ஸ்ரீராமாநுஜர் மார்கழி மாதம் கடைசி 7 நாட்கள் நடத்தினார். ஸ்ரீமணவாள மாமுனிகள் விபவத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் எழுந்தருளிய பொழுது உத்ஸவம் முடிந்து விட்டது. அவருக்கு சேவை சாதிக்க வேண்டும் என்று ஸ்ரீஆண்டாள் அர்ச்சகமுகேந



நியமித்து தைமாதப் பிறப்பன்று (தை 1ஆம் தேதி) உத்ஸவம் பூர்த்தி ஆகிறது.

ஸ்ரீஆண்டாள் ஸந்நிதியிலிருந்து புறப்பட்டு ஸ்ரீவடபத்ரசாயி ஸந்நிதிக்கு எழுந்தருளி திருமஞ்சனம் அலங்காரம் ஆகி கைத்தலத்தில் இரு அர்ச்சகர்கள் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு ஸ்தலத்தார்களின் குடை, சாமரம் உபசாரத்துடன் திருச்சின்னம் பரிமாற தாசநம்பிகளின் புஷ்பமாரியுடன் பல்லாண்டு இசைப்பாரின் ஸ்வஸ்தி வாசனத்துடன் ஸ்ரீவடபத்ரசாயி முன் எழுந்தருளப் பண்ணுவர்.

பின் ஸ்ரீவடபத்ரசாயி ஸ்ரீஆண்டாளுக்கு சேர்த்தி திருவாராதனம், மந்திர புஷ்பம், தளிகை அமுது செய்து திருக்கதவு சாத்தி விடுவர். பின் 1.30 மணி நேரம் கழித்து கதவு திரை திறந்து அரையர் திருப்பாவை முதல் பாட்டு இசை வியாக்யானம் பின் மற்ற 29 பாட்டுக்களுடன் சேவித்து “வடவேங்கடவர் பால் மனம் உருக்கும் நாச்சியார்” என்று சேவிக்கும் பொழுது நம் உடல் மெய் சிலிர்க்கும்.

பின் காலை 5.00 மணிக்கு புறப்பாடாகி ஸ்ரீபெரியாழ்வார் ஸந்நிதி முன் அரையர் திருப்பல்லாண்டு சேவித்த உடன் கற்பூரம் ஆகி ஆண்டாள் ஸந்நிதிக்கு எழுந்தருளுவர்.

1ஆம் திருநாள் காலை பல்லக்கில் அலங்காரம் ஆகி போர்வை சாற்றி புறப்பாடு ஆகி கோபுர வாசலில் எழுந்தருளியவுடன் போர்வை படி களைந்து சர்க்கரை, பொரி அமுது செய்வர். பின் அரையர் ஸ்வாமிக்கு ஸ்தலத்தார்கள் “அழகிய மணவாளப் பெருமாள் அரையர்” என்று அருளிப்பாடு ஆனவுடன் அரையர் ஸ்வாமி திருப்பாவை 26ஆம் பாட்டான **“மாலே மணி வண்ணா”** என்ற பாட்டை சேவித்தவுடன் கோஷ்டி தீர்த்தம், சடாரி, சர்க்கரை விநியோகம் ஆகி ஸ்ரீவடபத்ர சாயி கொடுத்த சாலப்பெரும் பறை, கொடி, விதானத்துடன் மேளதாளங்களுடன்

பல்லாண்டிசைப்பாரின் வேத பாராயணத்துடன் விடாயாற்றி மண்டபங்கள் எழுந்தருளுவர்.

நாடகசாலைத் தெரு, திருவேங்கடமுடையானுக்கு ஸ்ரீஆண்டாள் சூடிக்கொடுத்த மாலை சாற்றி விடாயாற்றி கண்டு அருளி எண்ணைக்காப்பு (நீராட்ட) மண்டபம் எழுந்தருளுவர். திருவாராதனம் உபசாரங்கள் கண்டருளி மந்திர புஷ்பம் ஆகி சுருள் (வெற்றிலை பாக்கு) அமுது செய்து பட்டர்பிரான் சுருள் கோஷ்டி. 2ஆம் உத்ஸவம் ஸ்ரீகள்ளழகர் திருக்கோலம். 3ஆம் உத்ஸவம் ஸ்ரீநவநீதகிருஷ்ணன் திருக்கோலம், 4ஆம் உத்ஸவம் முத்தங்கி, 5ஆம் உத்ஸவம் ஸ்ரீபெரிய பெருமாள், 6ஆம் உத்ஸவம் மோஹினி திருக்கோலம், 7ஆம் உத்ஸவம் தங்கக் கவசம் சாற்றிக் கொண்டு எழுந்தருளுவர்.

மாலை 03.00 மணிக்கு 3 போர்வை சாற்றிக் கொண்டு சவுரி சாற்றி தலையலங்காரத்துடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் எழுந்தருளி இருப்பர். ஸ்தானீகர்கள், திருவாசிரியம் சேவிப்பார்கள். பின் கற்பூரம் ஆகி ப்ரபன்னபாகை சாற்றிக் கொண்டு அர்ச்சகர்களில் ஒருவர் திருவாபரணம் களைந்து கொடுக்க மற்றவர் தாம்பாளத்தில் வாங்கிக் கொள்வர். ஸ்தானீகர்கள் ப்ரபந்த பாகை சட்டையுடன் அடப்பம் (வெற்றிலை பாக்கு) கொடுக்க, மற்றொரு ஸ்தானீகர் காளாஞ்சியில் வாங்குவர். ஸ்தானீகர்கள் எண்ணைக்காப்பு கொடுக்க அர்ச்சகர்கள் சவுரியில் 3 தடவை சாற்றுவர். சீப்பு, சிடுக்கு வாரி, உபசாரங்களுடன் கண்ணாடி காட்டி, கொண்டை போட்டு புஷ்பம் சாற்றிக் கொண்டு கற்பூரம் ஆரத்தி ஆகும். பின் தாயார் வெற்றிலை பாக்கு அமுதுசெய்து கொண்டு பத்தி உலாத்தல் ஆகி திருமஞ்சன மண்டபம் எழுந்தருளுவர். நவ கலச திருமஞ்சனம் தங்கக் குடத்துடன் வேதப்பிரான் பட்டர் ஸ்தானீகர்கள் திருமஞ்சனக் கவி சேவிக்க கோஷ்டியார் வேத பாராயணத்துடன் அரையர் நீராட்டம் சேவிக்க திருமஞ்சனம் நடைபெறும். பின் ஈரவாடை தளிகை அமுது செய்து கோஷ்டி ஆனவுடன் ஆண்டாள் பத்தி உலாத்தல் ஆகி தினம் ஒரு வாஹனத்தில் எழுந்தருளுவர். வாஹனத்தில் அம்மானை விளையாட்டு பஞ்சாங்க படனம் ஆகும். உபதேசரத்தினமாலை இயலுடன் எழுந்தருளி ஸ்ரீவடபத்ர சாயி ஸந்நிதிக்கு எழுந்தருளுவர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஸந்நிதிகளில் தனுர்மாத கோஷ்டியில் காலை திருப்பள்ளி எழுச்சி, திருப்பாவை சேவை மட்டும் ஆகும். தினம் ஒரு நாள் பாட்டு கிடையாது. மென்னடையன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூர் உறைவான் முன் அரையர் ஆண்டாளின் சார்பாக தினம் திருப்பாவை நாள் பாட்டு சேவிப்பர். முதல் 5ஆம் உத்ஸவங்கள் 4 பாட்டுக்கள் ஆகவும், 6, 7 உத்ஸவங்களில் 21 முதல் 23, 24 முதல் 26 பாட்டுக்கள் சேவித்து 8ஆம் உத்ஸவம் தை மாதப் பிறப்பன்று 27ஆம் பாட்டு முதல் 30 பாட்டு சேவிப்பர். பின் ஆண்டாள் பெரியாழ்வார்

**ஸ்ரீஆண்டாள் ஸ்ரீவில்லிபுத்தூரே திருவாய்ப்பாடி ஆகவும், அங்குள்ள பெண்கள் இடைப்பெண்களாகவும், அவர்களிலே தானும் ஒருத்தியாகவும், ஸ்ரீவடபெருங்கோயிலே ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையாகவும், உள்ளே உறங்குகிற ஸ்ரீவடபத்ர சாயியை ஸ்ரீகிருஷ்ணனாகவும் அனுகாரம் செய்து நோன்பு நோற்கிறாள். அந்தப் பாவனை நீராட்ட உத்ஸவ முதல் திருநாளுக்கு முந்தைய நாள் நடக்கிறது. அதற்கு பிரியாவிடை உத்ஸவம் என்று பெயர்.**



ஸந்நிதி வாசலில் எழுந்தருளியிருக்க அரையர் திருப்பல்லாண்டு சேவிக்க கற்பூரம் ஆரத்தி ஆகி ஆஸ்தானம் எழுந்தருளுவர்.

ஆஸ்தானம் எழுந்தருளிய உடன் ஸ்ரீஆண்டாள் ஸ்ரீரெங்கமன்னார் கனகசமர பூபால சிம்மாசனத்தில் எழுந்தருளி இருக்க உத்ஸவத்தை நடத்திக் கொடுத்த ஸ்ரீராமாநுஜரான கோயிலண்ணர் சிம்மாசனத்தில் எழுந்தருளி இருப்பர். ஸ்ரீஆண்டாள் ஸ்ரீரங்க மன்னாருக்கு திருவாராதனம் ஆன உடன் ஸ்ரீராமாநுஜருக்கும் சேர்த்தி திருவாராதனம் ஆகும். பின் ஸ்ரீராமாநுஜருக்கு "கோயில் அண்ணன்" என்று அருளிப்பாடு சாதித்து திருமாலை ஸ்ரீசடாரி மரியாதை ஆகும். பின் ஸ்தானீகர்கள் "அருளிப்பாடு ஸ்ரீவைஷ்ணவாள்" என்று கோஷ்டியாருக்கு அருளிப்பாடு ஆனவுடன் அரையர் ஸ்வாமி வில்லிபுத்தூருறைவான் முன் சேவித்த திருப்பாவை பாசுரங்களை கோஷ்டியார் சேவிப்பர்.

8ஆம் உத்ஸவம் ஸ்ரீமணவாள மாமுனிகள் சேவிக்க ஏற்பட்ட உத்ஸவம். அன்று தினம் போல் நீராட்ட மண்டபம் எழுந்தருளி சவுரி திருமஞ்சனம் ஆகி பல்லக்கில் புறப்பட்டு கோபுர வாசலில் கம்பன் சமர்ப்பித்த "கொச்சுத் திருவாபாரணம்" சாற்றிக் கொள்வர். வில்லிபுத்தூரார் முன் அரையர் திருப்பாவை நாள்பாட்டு ஆகி திருப்பாவை சாற்றுமறை ஆகும். ஸ்ரீமணவாள மாமுனிகள் ஸந்நிதி வாசலில் ஸ்ரீஆண்டாள் எழுந்தருளி இருக்க ***"இன்றோ திருவாடிப்பூரம்"***, ***"பெரியாழ்வார் பெண்பிள்ளை"***, ***"அஞ்சுகுடிக்கு ஒரு சந்ததியாய்"*** என்ற பாசுரங்கள் கோஷ்டியார் சேவிக்க ஸ்ரீமணவாள மாமுனிகள் கைத்தலத்தில் ஸ்ரீஆண்டாள் அனுப்பிய திருக்குடை, திருச்சாமரங்கள், திருமுன் பந்தத்துடன் எழுந்தருளி ஸ்ரீஆண்டாளுக்கு முன் அடைக்காய் கொடுத்து சேவித்து நிற்க ஸ்ரீமாமுனிகளுக்கு திருமாலை, திருப்பரிவட்டம், ஸ்ரீசடகோபம் மரியாதை ஆகி அடைக்காய் அமுது செய்வர்.

கல்யாண மண்டபத்தில் உபதேசரத்தின மாலை சாற்று மறை ஆகி ஸ்ரீஆண்டாளுக்கு ஊஞ்சல் நடக்கும். பின் ஆண்டாள் ஆஸ்தானத்தில் ஸ்ரீபெரிய பெருமாள் உபயநாச்சிமாருடன் எழுந்தருளியிருக்க அருகில் ஸ்ரீஆண்டாள், ஸ்ரீரங்கமன்னார், கருடாழ்வாருடன் ஆழ்வார் ஆசார்யர்களுடன் எழுந்தருளி இருக்க, ***"கூடாரை வெல்லுஞ்சீர்", "கறவைகள் பின்", "சிற்றஞ் சிறுகாலே", "வங்கக்கடல் கடைந்த..."*** திருப்பாவை பாசுரங்கள் சேவித்து, இயல்சாற்று சேவித்து சாற்றுமறை ஆகும்.

நீராட்ட மண்டபத்தில் ஸ்ரீஆண்டாள் எழுந்தருளிய உடன் 2ஆம் உத்ஸவம் முதல் 8ஆம் உத்ஸவம் முடிய முதல் நாள் சேவித்த நாள் பாட்டு க்ரமத்தில் திருப்பாவை பெரிய வாச்சான்பிள்ளை வ்யாக்யானத்துடன் காலக்ஷேபம் நடைபெறும். 8ஆம் உத்ஸவம் ஸ்ரீஆண்டாள் கனுவிற்கு பெரியாழ்வார் ஸந்நிதி எழுந்தருளிய உடன் உடையவர் ஸந்நிதியில் திருப்பாவை வியாக்யான காலக்ஷேப சாற்றுமறை நடைபெறும். பின் ஸ்ரீஆண்டாளுக்கு முத்துக்குறி, அரையர் சேவை ஆன உடன் ஆஸ்தானத்திற்கு ஸ்ரீரங்க மன்னாருடன் எழுந்தருளி நீராட்ட உத்ஸவம் பூர்த்தி ஆகும்.

ஸ்ரீஆண்டாள் தான் நோற்ற திருப்பாவை நோன்பு உத்ஸவத்தை அனைவரும் வந்து சேவித்து எங்கும் திருவருள் பெற்று இன்புற ஸ்ரீஆண்டாள் ஸமேத ஸ்ரீரங்க மன்னார் திருவேங்கடமுடையான் திருவடிகளில் வேண்டி நிற்கிறேன். இந்த கட்டுரையில் உள்ள விஷயங்களை குற்றமின்றி குணம் பெருக்கிக் கொள்ள வேணுமாய் பெரியோர்களை அடிபணிந்து வேண்டுகிறேன்.





# 12 நாட்கள் தரிசனம் அளிக்கும் பார்வதி தேவி

**- திருமதி விஜயலட்சுமி சுப்பிரமணியம், கல்லிடைக்குறிச்சி.**

கர்நாடகா மாநிலம் ஹாசன் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீஹசனாம்பிகா தேவி ஆலயம் ஓராண்டில் தீபாவளியை ஒட்டி ஒரு வாரம் மட்டுமே தரிசனத்திற்காகத் திறக்கப்படுகிறது.

கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டம் கொட்டியூர் என்ற கிராமத்தில் ஸ்ரீமஹாதேவர் ஆலயம் வாவலி ஆற்றின் கரையில் உள்ளது. இந்த ஆலயம் வைசாக மஹோற்சவத்தின் (மே–ஜுன்) போது 27 நாட்கள் மூடப்பட்டு, ஆற்றின் கிழக்குக் கரையில் தற்காலிகமாக அமைக்கப்படும் கொட்டகை போன்ற கோயிலுக்கு பக்தர்கள் சென்று தரிசிக்கின்றனர். இந்த இடத்தில்தான் தட்சன் யாகம் செய்ததாகவும், யாகத்தில் தன்னை தந்தை அவமதித்து விட்டார் என்று வருந்தி தட்சனின் மகளான தாட்சாயணி தேவி தன்னை மாய்த்துக் கொண்டதாகவும் தல வரலாறு தெரிவிக்கிறது. தற்போதும் அது யாக சாலையாகக் கருதப்பட்டு புனிதமாக வழிபடப்படுகிறது.

கேரளத்தில் இன்னொரு பிரபலமான ஆலயம் திருவைராணிக்குளம் ஸ்ரீ மஹாதேவர் ஆலயம். இந்த ஆலயத்தில் சிவபெருமான் கிழக்கு திசை நோக்கியும், தேவி மேற்கு திசை நோக்கியும் ஒரே கருவறையில் காட்சி தருகின்றனர்.

ஒரு முறை சிவபெருமானுக்கு ஆலய மடப்பள்ளியில் பார்வதி தேவி தன் கரங்களால் அன்போடு நைவேத்தியம் தயார் செய்த காட்சியை ஒரு அர்ச்சகர் எட்டிப் பார்க்க தேவி கோபித்துக் கொண்டு தன் சன்னதிக் கதவுகளை அடைத்துக் கொண்டதாகவும், பின்னர் பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க தேவி ஆண்டிற்கு ஒரு முறை 12 நாட்களுக்கு மட்டும் தரிசனம் தர சம்மதித்ததாகவும் வரலாறு. சதிதேவி பார்வதியாக அவதரித்து இந்த ஆலயத்தில் சிவபெருமானை மணந்ததாக ஐதிகம். அதனால் திருமணத் தடை விலக,தேவியை வணங்குகின்றனர். தேவியின் சன்னதி முன்பாக தினமும் தீபாராதனை நைவேத்திய வழிபாடுகள் நடைபெறுகின்றன.

தேவியின் சன்னதி மார்கழி மாதம் ஆருத்ரா உற்சவத்தின் போது பௌர்ணமி நாளன்று திறக்கப்பட்டு 12 நாட்களுக்குப் பின்னர் மூடப்படுகிறது. நடதுறப்பு (நடை திறப்பு) என்ற பெயரில் பெரிய விழாவாக நடத்தப்படுகிறது. தாரு சிற்பம் எனப்படும் மரத்தினால் செய்யப்பட்டதால் தேவியின் விக்கிரகத்திற்கு அபிஷேகங்கள் செய்யப்படுவதில்லை. மஞ்சள் பொடி மட்டுமே விக்கிரகத்தின் மீது பூசப்படுகிறது.

நடை திறப்பு நாட்களில் தேவிக்கு பட்டுப் புடவை, தாலி, மஞ்சள், குங்குமம், பழங்கள், கைப்பிடியுடன் கூடிய கண்ணாடி ஆகியவற்றை காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றனர். இந்த நடைதிறப்பு உற்சவம் 2.1.2026 முதல் 14.1.2026 வரை கோலாகலமாக நடைபெறும். இவ்வாலயம் காலை 4.30 மணி முதல் 11.00 வரையிலும், மீண்டும் 5.00 மணி முதல் 7.30 மணி வரையும் நடை திறந்திருக்கும்.



மாத்ருஸ்ரீ தரிகொண்ட
வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

அக்டோபர் மாத இதழின் தொடர்ச்சி...

தன் மனைவியான சந்திரரேகா அங்கு இருந்து புறப்பட்டுச் சென்றபின் மாதவன் நதிக் கரையோரத்தில் இருந்த அந்த சண்டாளிப் பெண்ணை நோக்கி நடந்தான். தன்னை நோக்கி வருகின்ற மாதவனை அப்பெண் உற்றுப் பார்த்தாள். அவனுடைய உடை நடைபாவனை களைப் பார்த்த அவள் அவனொரு அந்தணன் என்பதை அறிந்து கொண்டாள். உடனே தான் அவனுக்கு எதிரே நிற்பதை விரும்பாது சற்று விலகி நின்றாள். ஆயினும், மாதவன் அவள் அருகில் நெருங்கி வருவதைக் கண்டு "சுவாமி! தாங்கள் யார் என்பதை நான் அறிந்து கொண்டேன். உம்மைப் பார்க்கும் போது நீர் ஓர் அந்தணன் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. அதனால் நான் உனக்கு எதிரே வராமல் சற்று தள்ளியே நடக்கின்றேன். ஆனால், தாங்கள் என்னை யார் என்று அறிந்து கொள்ளவில்லை போலும்" என்றாள். "உன் பெயர் என்ன?" எனக் கேட்டப்படி அவளை மேலிருந்து கீழாகப் பார்த்தான் மாதவன்.

"என்பெயர் குந்தலா. தங்களைப் போன்றவர்கள் என்னிடம் வருவதும், உடலெல்லாம் கண்ணுக்கிக் கொண்டு என்னைப் பார்ப்பதும் நல்லது அல்ல. நானோ ஒரு கீழ்சாதிப்பெண்" என்று தன்னைப் பற்றி எடுத்துக் கூறினாள். அப்பொழுது அந்தணன் அவளைப் பார்த்து "குந்தலா! நீ ஒரு அழகு தேவதை. உன்னைப் போன்ற ஒரு பெண்ணை பிரம்மன் கீழ் மகளாய்ப் பிறக்க வைப்பதென்ன?. குந்தலா! கடலுக்கடியில் எங்கேயோ ஒரு மூலையில் கிடைக்கும் ரத்தினங்களைக் கொண்டு தேவாதி தேவர்களும் தமது மணி முடியில் வைத்து, சூடி அழகு பார்ப்பதில்லையா? அதுபோல நான் உன்னை மணந்து கொள்ள விரும்புகிறேன்" என்று தன் எண்ணத்தை வெளிப்படுத்தினான்.

அந்தணனின் பேச்சைக் கேட்டு அவள் திகைத்து, பலவிதமான நன்மொழிகளை எடுத்துக்கூறி, நீர் உமது எண்ணத்தை மாற்றிக் கொண்டு உமது வீட்டிற்குப் புறப்பட்டுச் செல்லுங்கள் என்று அறிவுரை கூறினாள். ஆனால், மாதவன் அவ்விடத்தை விட்டு நகரவில்லை. அதைக் கண்டு குந்தலா மேலும் கூறினாள்.

"இறைவன் உலக இயக்கத்திற்காக உயிர்களிடத்தில் ஆண், பெண் என்ற வேறுபாட்டை தோற்றுவித்தார். மக்கள் அனைவரும் நல்வாழ்வு வாழ்வதற்காக நான்கு வர்ணங்களை ஏற்படுத்தினார். ஆணும் பெண்ணும் இருவரும் ஒரே வர்ணத்தில் திருமணம் செய்து கொண்டால், அவர்கள் குடும்ப வாழ்க்கை நல்ல முறையில் அமையும் என நினைத்து அதற்கு ஏற்றார்போல் வழிமுறைகளையும் ஏற்படுத்தினார். எந்த வர்ணத்தினர் ஆயினும் ஓர் ஆண்மகன் வேறொரு பெண்ணிடமோ, ஒரு பெண் வேறொரு ஆண்மகனிடமோ சிற்றின்பத்தை விரும்புவது தர்மத்திற்கு விரோதம் ஆகும். நீயோ அந்தணன். மற்றவர்களைக் காட்டிலும் தர்மங்களைப் பற்றி நன்கு அறிந்தவர். சண்டாளிப் பெண்ணுடன் சங்கமம் தகாத செயல் என்பதை நன்கு அறிவாய். உன்னிடம் ஒன்றை கூறுகிறேன். பிறப்பில் தாங்கள் முதல்

## குறுக்கெழுத்துப்புதிர் 113க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | க | ர | ஜோ | தி | த | ரி | ச | ன | ம் | | டு |
| ஞ் | ரி | ழா | வி | ரு | தி | த் | டி | ட் | க | டை | 2 பா |
| ச | த | வி | 3 வெ | ண் | ணை | த் | தா | ழி | வி | ழா | ப் |
| ள் | டை | ரு | 4 ஆ | ழி | த் | தே | ர் | வி | ழா | வி | ற |
| நீ | வா | தி | டி | க | க் | ர் | 5 சொ | 6 சி | வி | ப | பு |
| ரா | பா | த் | ப் | 7 தை | 8 சூ | க | 9 செ | த் | தி | தீ | ர் |
| ட் | ப் | ப | பூ | ப் | ர | ழ | டி | தி | த் | கை | வா |
| டு | ப | ப் | ர | பூ | ச | 10 அ | ல் | ரை | ர் | தி | ழ் |
| வி | ஷ் | 11 தெ | ப் | ச | ம் | | | வி | து | த் | மா |
| ழா | 12 பு | ட் | டு | த் | தி | ரு | வி | ழா | 13 ச | ர் | ம் |
| ர் | தீ | ன் | ம | ம் | ய | தி | ம | தி | ந் | 14 கா | ந |
| | ழா | வி | ரு | தி | ன் | ம | ம் | ய | ரி | மா | 15 ஸ்ரீ |

வர்ணத்தைச் சேர்ந்தவராகப் பிறந்துள்ளீர். உம்முடைய உடல் வேதபூதமானது. பரம பவித்திரமானவர். ஆனால், நான் கீழ்க்குலத்திலே பிறந்து கீழ் மகளாய் வளர்ந்து வருபவள். எந்த வகையில் பார்த்தாலும் இச்செயல் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று முறையிட்டாள்.

குந்தலையின் பேச்சுக்கள் எதுவும் மாதவனிடத்தில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. நதிக்கரை ஆனபடியால் மாதவன் அவளை நெருங்கினான். அப்பொழுது நதிக்கரையில் ஆள் அரவமற்று இருந்த ஏகாந்தமும் மாதவனுக்கு மலையளவு துணிச்சலைத் தந்தது. இவையனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த குந்தலா இறுதியாக “ஓ தெய்வமே! அந்தணச் சீலரான ஒருவர் வினைப்பயன் காரணமாக என்னுடன் ஒன்று சேர விரும்புகிறார். தெரிந்தே அவர் நரகக் குழியில் விழத் தயாராகிறார். என் மீது எந்தவொரு குற்றமுமில்லை. இதற்கு தாங்களே சாட்சி என்று வேண்டிக் கொண்டாள். ஆனால், மாதவன் “அழகு தேவதையே! இன்று என்னுடைய தவம் பலித்தது. நதிக்கரையோரத்தில் உன் மேனி அழகைக் கண்டேன். என்னைத் தவிர்க்காதே” என்று கூறிக் கொண்டே இன்னும் அவளை நெருங்கினான். இறுதியாக அவள் “சிற்றின்பத்திற்காக நீ என்னிடம் வருவது சரி அல்ல. இச்சுகத்தை உன் மனைவி இடத்தில் தர்ம வழியில் அடையலாம். அதில் எந்தவொரு குற்றமும் இல்லை. இச்செயலால் உனக்கு மட்டுமல்லாது உமது அந்தணக் குலத்திற்கே கேடு உண்டாகும். சிற்றின்ப மயக்கத்தால் என்னைத் தொடாதே” என்று எவ்வளவு தடுத்தும், முறை இட்டுக் கேட்டுக் கொண்டாலும், மாதவன் அவளைத் தன்னவளாய் ஆக்கிக் கொண்டான்.

ஏதொன்றும் செய்ய இயலாதவளாய் ஆன அவள், “பிரபு நீ இழி குலத்தவனாய் ஆனாய். இனி நீ இப் பூணூலைத் தரிப்பது எதற்கு? எல்லா மனிதர்களைப் போல நீயும் சாதாரண மானவனாக உன் வாழ்க்கையை வாழ்வாய்” என்றாள். மாதவன் அவள் கூறியபடியே மார்பில் அணிந்திருந்த பூணூலைக் கழற்றினான். அந்தணருக்குரிய ஆசாரங்களையும் கைவிட்டான். எப்பொழுதும் சிற்றின்பங்களிலேயே குந்தலாவோடு பன்னிரண்டு ஆண்டுகள் கிருஷ்ணா நதிக்கரையிலேயே காலம் கழித்தான். குந்தலை இறந்து போனாள். அவள் இல்லாத வாழ்க்கை வீண் என அவன் எண்ணினான்.

“மக்கள் எல்லோராலும் மதிக்கும் அந்தணர் குலத்திலே பிறந்து நான் செய்யத்தகாத செயல்களைச் செய்தேன். இனி என்னை அந்த ஸ்ரீஹரி தான் காப்பாற்ற வேண்டும்” என்று மிகவும் வருந்தினான். அப்பொழுது அந்த வழியாக சில ராஜாக்கள் தங்கள் பரிவாரங்களோடு வேங்கடாத்ரிக்குச் சென்று கொண்டு இருப்பதைக் கவனித்தான்.

தெலுங்கு மூலம் :
பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் :
டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

பெருமை அறிவோம்...



# கார்த்திகை தீபப் பெருவிழா

- திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத்



நமது புனித பாரதத்தில் எத்தனையோ கோயில்கள். அவற்றில் எத்தனையோ உற்சவங்கள். அவற்றை ஒட்டி மக்களும் வீடுகளில் கொண்டாடும் பண்டிகைகள். நம்முடைய முக்கியமான பண்டிகைகளில் கார்த்திகை தீபப்பண்டிகையும் ஒன்று. இது இந்தியா முழுவதும் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை என்றாலும் அவரவருடைய பிரதேசத்தில் கொண்டாடப்படும் பஞ்சாங்கத்தை அனுசரித்து அந்த தினத்தில் இதைக் கொண்டாடுவது வழக்கம்.

உதாரணமாக, சூரியனைப் பின்பற்றும் நாட்காட்டியில் உள்ளது போல் எதையும் கொண்டாடுவது நம் தமிழர்கள் வழக்கம். அதன்படியே திதிகள், நாட்கள், பண்டிகைகள் பின்பற்றப்படுகின்றன. ஆந்திரா, கர்நாடகா மக்கள் சந்திரனுடைய அடிப்படையில் பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். மாலை வேளையில் சூரியன் அஸ்தமிக்கும் முன்பே விளக்கேற்றி, திருவிளக்கு ஸ்தோத்திரமும், மகாலட்சுமி ஸ்தோத்திரமும் சொல்லி விளக்கையே மகாலட்சுமியாகப் பாவித்து, நைவேத்தியங்களைச் சமர்ப்பிப்பார்கள்.

கார்த்திகை தீப விழாவினை மூன்று நாட்கள் கூட கொண்டாடுவார்கள் முதலில் பரணி தீபம், மறுநாள் விஷ்ணு தீபம், மூன்றாம் நாள் சர்வாலய தீபம். அது கார்த்திகை மாதத்தில் பௌர்ணமி மற்றும் ரோகிணி நட்சத்திரம் ஆகியவை வரும் நாட்களில் பண்டிகையாகக் கொண்டாடினாலும், கார்த்திகை மாதம் ஒன்றாம் தேதியிலிருந்து அந்த மாதம் முடிய வாசலில் இரண்டு விளக்குகள் வைப்பது தமிழர்கள் வழக்கமும் ஆகும்.

அவரவருடைய அகத்து வழக்கத்தைப் பொறுத்து கார்த்திகை அன்று காலையில் பெண்கள் வாசலில் படிக்கோலம் போட்டு, மாவிலைத் தோரணம் கட்டி அதன் பிறகு பண்டிகைக்கான தளிகையும் செய்வர். அதாவது வடை, பாயசம், அப்பம் இதெல்லாம் செய்வது வழக்கம். மாலையில் புது மண் அகல்களும் உபயோகப் படுத்துவர். அருகில் உள்ள கோயில்களுக்குச் சென்று புது மண் அகலை ஏற்றிவிட்டு வருவார்கள். சகோதரிகள் இருந்தால் அண்ணன்மார் அந்தப் பண்டிகையில் சீருக்காக பணம் அனுப்புவது வழக்கம். இதன் பிறகு சொக்கப்பனை எரிக்கப்படுகிறது. அதாவது பனை மரத்தின் ஓலைகளை வைத்து நடுவே ஒரு சிறிய மரத்தை முக்கோண வடிவில் அமைத்து, உள்ளே பட்டாசுகள் வைத்து கொளுத்தி விடுவார்கள். அந்தப் புகை அந்தக் காலகட்டத்தில் வயல்களைப் பாழ் செய்யும் பூச்சிகள் வராமல் தடுத்து விடும் என்பர். அதே போல் வீடுகளிலும் பட்டாசுகள் வெடிப்பது வழக்கம். இது இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது. ஏன் தெற்கு ஆசிய நாடுகளிலும் இன்னும் பல நாடுகளிலும் கூட கார்த்திகை தீபம் கொண்டாடப்படுகிறது.

கார்த்திகை சம்பந்தமாக கேரளாவில் ஒரு கதை உண்டு. ஒரு இளவரசி ஒரு யானையை மிகப் பிரியமாக வளர்த்து வந்தாள். அந்த யானையை அவளுடைய சகோதரனாகவே நினைத்து வந்ததால் அவள் கல்யாணம் ஆகிப் போகும்பொழுது அந்த யானையை விட்டுப் போவது அவளுக்கு மிகவும் வருத்தத்தை

கொடுத்தது. அதனால் அந்த வருடம் அங்கே ஒரு யானைக்கால் அளவு யானை விரும்பி சாப்பிடும் பொறியை வெல்லத்துடன் உருண்டை பிடித்து, யானை முதுகின் மேல் விளக்கு வைத்து தன்னுடைய சகோதரனாக நினைத்திருந்த யானையை நினைத்து ஏற்றினாள்.

இந்தப் பண்டிகை இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது. தவிர, ஆசிய நாடுகள் பலவற்றிலும் கூட வெகு விமரிசையாக கார்த்திகையைக் கொண்டாடுகிறார்கள். திருமலையில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா அன்று தீபங்களை ஏற்றி வைத்து திருக்கார்த்திகை விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடுவர். திருப்பதி ஆழ்வார் தீர்த்தம் அருகே சொக்கப்பானை எரித்து தீபத் திருநாளைக் கொண்டாடுவர்.


## நூல் மதிப்புரை




நூலின் பெயர் :
அருணகிரிநாதர் அருளிய
திருப்புகழ் அமுதம்
நூலாசிரியர் :
திரு. பி.எல்.முத்துக்குமரன்
கிடைக்குமிடம்:
முல்லை பதிப்பகம்
323/10, கதிரவன் காலனி,
அண்ணா நகர் மேற்கு, சென்னை – 600 040.
செல் : 98403 58301; விலை : ரூ.70/–

- திருப்புகழில் தேர்ந்தெடுத்த 45 பாடல்களுக்கு மூலமும் உரையும் இணைந்த நூல். இந் நூலில் உள்ள திருப்புகழ் பாடல்களை தினமும் பாராயணம் செய்து வந்தால் அதனால் கிடைக்கக்கூடிய பலன்களையும் நூல் ஆசிரியர் தலைப்பு வடிவிலேயே குறிப்பிடப் பட்டு இருப்பது சிறப்பாகும்..
- அறுபடை முருகன் குறித்து அருமையான விளக்கங்கள்.
- திருப்புகழ் அஷ்டோத்தர சத திவ்ய நாமங்கள்.
- சிறுவாபுரி திருப்புகழ் பாடல்கள்.
- அருணகிரிநாதர் வாழ்க்கைக் குறிப்புகள் ஆகியன அடங்கிய நூல்.
- ஒவ்வொரு முருகப் பக்தரும் தவறாமல் படிக்க வேண்டிய அருமையான நூலாகும்.


மாயக் கண்ணனவனை மனதில் வரித்து
மனங்கவர் மார்கழியில் நோன்பு நோற்று
மன்னவன் ரங்கனவனை மணம் முடித்த
முத்தமிழ் புகழ் ஆண்டாளைப் பணிவோம்!

பெரியாழ்வார் பெற்ற பூங்கோதையவளாம்
பேரானந்தம் தரும் திருப்பாவை தந்தவளாம்
பையத்துயின்ற பரமன் அடி பாடியவளாம்
பறைதரு நாரணனை (கை)பற்றியவளாம்!

ஆயர் குல அணிவிளக்கை அடைந்தவளாம்
அரங்கத்து பெருமாளின் அகம் புகுந்தவளாம்
ஆலிலை மேல் தவழ்வோனை வரித்தவளாம்
அச்சுதன் கைத்தலம் பற்ற கனா கண்டவளாம்!

ஓங்கி யுலகளந்த உத்தமனை ஓதியவளாம்
ஒப்பிலா ரங்க மன்னாரின் துணையவளாம்
உறியடி கள்வன் கண்ணனை கவர்ந்தவளாம்
உயர் கீதை தந்தோனை தனதாக்கியவளாம்!

சங்கு சக்கரம் கொண்டானை சேர்ந்தவளாம்
சாரங்கன் நெஞ்சில் என்றும் அமர்ந்தவளாம்
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தந்தவளாம்
செல்வத் திருமால் சேர் ஆண்டாளவளாம்!




– திரு.தி.சுவாமிநாதன்,
கோவை,
9013300706



# அடியேனை ஆட்கொண்டருளே!

–பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963.

டிசம்பர் மாதம் என்பது கார்த்திகை மாதத்தின் பிற்பகுதியும், மார்கழி மாதத்தின் முற்பகுதியும் கலந்த மாதம். கார்த்திகை என்றாலே நமக்கு இரண்டு ஆழ்வார்களும், ஒரு ஆசாரியரும் கட்டாயம் நினைவுக்கு வருவார்கள். கார்த்திகை மாதம் கார்த்திகையில் அவதரித்தவர் திருமங்கை ஆழ்வார். மற்றொரு ஆழ்வார் கார்த்திகை ரோகிணியில் அவதரித்த திருப்பாணாழ்வார். ஆசாரியார் திருவாய்மொழி ஈடு சாதித்த சுவாமி நம்பிள்ளை.

திருப்பாணாழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகிய இரண்டு ஆழ்வார்களுக்கும் சில வியக்கத்தக்க சிறப்புக்கள் உண்டு. திருப்பாணாழ்வார் திருவரங்கத்தைத் தவிர வேறு எந்த திவ்ய தேசத்தையும் பாடாதவர். பாணர் குலத்தில் பிறந்தாலும், பாட்டுத் திறத்தால் அரங்கனை ஆண்டவர். லோகசாரங்க மகா முனிவரின் தோள் மீது ஏறி அரங்கனுடன் கலந்தவர். ஆனால் அவரும் அரங்கனைப் பாடும் போது திருமலையையும் சேர்த்துத்தான் பாடுகின்றார்.

*“மந்தி பாய் வட வேங்கட மாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான்”* என்று திருவேங்கடத்தைப் பாடி, அந்த திருவேங்கடத்தான்தான் அங்கே இருந்து இங்கே வந்து அழகு துயில் கொண்டான் என்று பாடுகிறார். பத்தே பாசுரத்தில் பரமனைப்பாடி ஆழ்வாராக மாறியவர். அரங்கனை அடைந்தவர்.

இதே கார்த்திகையில் ரோகிணிக்கு முன்னால் வரும் கிருத்திகை நட்சத்திரத்தில் அவதரித்தவர் திருமங்கை ஆழ்வார். திருப்பாணாழ்வார் அரங்கனைத் தவிர வேறு யாரையும் சென்று சேவிக்கவில்லை. ஆனால், திருமங்கையாழ்வார் வடதிசை இமயம் முதற்கொண்டு தென்திசை குமரி வரை பற்பல திவ்ய தேசங்களைத் தரிசனம் செய்து மங்களாசாசனம் பாடினார்.

திருப்பாணாழ்வார் அரங்கனைப் பாடும் பொழுது எப்படி மறக்காமல் திருவேங்கடத்தானைப் பாடினாரோ, அப்படி திருமலையின் மீது மிகுந்த பிரியம் கொண்டு பாடியவர் திருமங்கையாழ்வார்.

திருமலை மீது திருமங்கையாழ்வார் ஈடுபாடு அற்புதமானது. பெருமாள் தனது செவியில் திருமந்திரம் ஓதிய பிறகு திருமொழியைத் தொடங்கி *“வாடினேன் வாடி… நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்”* என்று எட்டெழுத்து மந்திரத்தின் சேஷமான நாராயண நாமத்தின் அற்புதத்தை ஒரு பதிகம் முழுக்கப் பாடினார்.

அடுத்து நாமத்தின் உள்ளீடான நாமியைச் (பெருமாளை) சேவிக்க வடதிசை யாத்திரை துவக்கினார். திருப்பிரிதி, திரு வதரி, திருபத்ரிகாசிரமம், திருசாளக்கிரா மம், நைமிசாரண்யம், சிங்கவேள் குன்றம் (அகோபிலம்) தரிசித்துவிட்டு திருமலையை நோக்கி ஆவலுடன் ஓடி வருகின்றார். இது வரை வடநாட்டுத் திருத்தலங்களுக்கு எல்லாம் ஓரோர் பதிகம் தந்த திருமங்கை ஆழ்வார் திருமலையப்பனைப் பார்க்கும்

ஆவலில் வந்து அமர்ந்து நான்கு பதிகங்கள் திருமலையப்ப னுக்குச் சமர்ப்பிக்கிறார்.

மனிதப்பிறவியின் நிலையாமை ஆழ்வாருக்குத் தெரிகிறது. நிலையற்ற மனிதப்பிறவியின் இறைவனை வணங்காமல் காலத்தை வீணாகக் கழிக்கும் மனிதர்களை நினைத்து அங்கலாய்த்துப் போகிறார் ஆழ்வார்,

"நிலையற்ற இந்த மனிதப் பிறவியை நீக்கி, என்னை உன்னுடையவனாக ஆக்கி இன்னருள் செய்த திருவேங்கடவன் என்னுடைய நெஞ்சில் உள்ளான்" என்று பாடுகின்றார்.

*மன்னாவிம் மனிசப் பிறவியை நீக்கி*
*தன்னாக்கித் தன்னின்னருள் செய்யும் தலைவன்*
*மின்னார் முகில்சேர் திருவேங்கடம் மேய*
*என்னானையென்னப்ப னென்னெஞ்சிலுளானே.*

இந்தப் பாசுரத்தில் திருமலையப்பனை மங்களா சாசனம் செய்கின்ற பொழுது நம்மாழ்வார் பாடிய *"அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா"* என்ற வரியை நினைத்துக்கொண்டு அதையே, *"மின்னார் முகில் சேர் திருவேங்கடம் மேய என்னானை என் அப்பன் என் நெஞ்சில் உள்ளானே"* என்று பாடுகின்றார்.

இதில் என்ன சிறப்பு என்று கேட்கலாம். "மின்னார் முகில் சேர்" என்ற வரியைப் பாருங்கள். மேகத்தில் மின்னல் சேரும். அந்த மின்னல் பளிச் சென்று தெரியும் பொழுது பின்னால் கருத்த மேகமும் தெரியும். அதைப்போல கருத்த மாமேக உருக் கொண்ட எம்பெருமானின் மார்பிலே மின்னலைப் போல பிராட்டி பிரகாசிக்கிறாள். அந்தப் பிரகாசத்தில் தான் திருமாலே தெரிகிறாராம்.

இங்கே சூட்சுமமாக, பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு பெருமாளை அடைய வேண்டும் என்ற த்வைய மகா மந்திரத்தின் தத்துவம் வெளிப் படுகிறது. திருவேங்கடம் என்ற திருத்தலத்தைப் பாடுகின்ற பொழுது அந்தத் தலத்தை இன்னுமா அடைய வில்லை என்று தன்னுடைய நெஞ்சை விரைவுபடுத்துகிறார் .

"பஞ்சபூதங்களும் அவன்தான், ஆயிரம் பெயர் கொண்டவனும் அவன்தான், அவன் இருக்கும் திருமலை எப்படிப்பட்டது தெரியுமா?" என்று வர்ணிக்கும் பாசுரம் நம் மனதை அப்படியே கவர்ந்து, திருமலைக்கு இழுத்துச் செல்லும்.

*பாரும், நீர், எரி, காற்றினோடு ஆகாசமும்,*
*இவை ஆயினான்,*
*பேரும் ஆயிரம் பேச நின்ற பிறப்பிலி பெருகும்*
*இடம்*
*காரும் வார் பனி நீள் விசும்பிடைச் சோரும் மா*
*முகில் தோய்தர,*
*சேரும் வார் பொழில் சூழ் எழில் திருவேங்கடம்*
*அடை, நெஞ்சமே!*

– பெரிய திரு.1–8–7

திருமலையப்பனே! நான் பாவமே செய்து வளர்ந்துள்ளேன். அதற்காக வருந்தி உன்னிடம் வந்திருக்கின்றேன். நீ எல்லாரையும் காப்பவன். சர்வ ரக்ஷகன் என்ற பெயர் எடுத்தவன். புருஷகாரம் செய்ய பிராட்டியை மார்பிலே வைத்திருப்பவன். அவள் உன் அருகிலே அகலாமல் இருக்கிறாள். இப்படி இருந்தும் என்னை ஏற்றுக்கொள்ள மறுக்கலாமா? நான் செய்த குற்றங்களைப் பொறுத்து என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கெஞ்சுகிறார்.

ஒவ்வொரு பாடலிலும் திரும்பத் திரும்ப இந்த வரி வந்துகொண்டே இருக்கும்.

*"நாயேன் வந்தடைந்தேன் நல்கி ஆள்*
*எனைக்கொண்டு அருளே"*
*"நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன்...*
*வந்தடைந்தேன் அடி யேனை ஆட்*
*கொண்டருளே"*
*"கொன்றேன் பல் உயிரை... அன்றே வந்த*
*டைந்தேன் அடியேனை ஆட் கொண்டருளே"*
*"நலம்தான் ஒன்றும் செய்திலேன், நல்லதோர்*
*அறம் செய்துமிலேன்...*
*அலந்தேன் வந்தடைந்தேன் அடியேனை*
*ஆட்கொண்டருளே"*
*"எப்பாவம் செய்தேன்... அப்பா, வந்தடைந்தேன்,*
*அடியேனை ஆட்கொண்டருளே"*
*"அண்ணா! வந்தடைந்தேன், அடியேனை*
*ஆட்கொண்டருளே"*
*"அரியே! வந்தடைந்தேன் அடியேனை*
*ஆட்கொண்டருளே"*

இப்படிப் பாடிக்கொண்டே வந்தவர், அடுத்து ஒரு பாசுரம் பாடுகின்றார்.

*"நோற்றேன் பல் பிறவி நுன்னைக்*
*காண்பது ஓர் ஆசையினால்;*
*ஏற்றேன் இப் பிறப்பே இடர்*
*உற்றனன் எம் பெருமான்!;*
*கோற்றேன் பாய்ந்து ஒழுகும் குளிர்*
*சோலைசூழ் வேங்கடவா!;*
*ஆற்றேன் வந்து அடைந்தேன்*
*அடியேனை ஆட்கொண்டருளே"*
– பெரிய திரு.1–9–8

பொருள் பார்ப்போம்: கோல் தேன் பாய்ந்து ஒழுகும் – கோல்களின்றும் தேன் இழிந்து வெள்ளமிட்டு ஒழுகும்; குளிர் சோலை சூழ் வேங்கடவா! – குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த திருமலையில் வாழ்பவனே!, எம்பெருமான் – எங்கள் ஸ்வாமியே!; பல் பிறவி நோற்றேன் – எனக்குப் பல பிறவிகள் உண்டாகும்படி காரியம் செய்து வைத்தேன்; உன்னை காண்பது ஓர் ஆசையினால் – உன்னை சேவிக்க வேணுமென்ற ஆசையினால்; இப்பிறப்பே ஏற்றேன் – இந்தப் பிறவியிலே உனக்கு அன்பனாக ஏற் பட்டேன்; இடர் உற்றனன் – (இன்னமும் நேரக்கூடிய பிறவிகளை நினைத்து) துக்கப் பட்டு நின்றேன்; (இனி பிறவிகள் நேராமைக்காக) வந்து அடைந்தேன் – அடியேனை ஆட்கொண்டருள்.

இந்தப் பாசுரத்தில் ஆழ்வார் மூன்று விஷயங் களைச் சொல்லுகின்றார்.

1.திரும்பத் திரும்ப பிறவி எடுக்கும் படியான ஒரு காரி யத்தைச் செய்து கொண்டே இருந்தேன். அதனால் பல பிறவிகள் எடுத்தேன்.

2. ஆனால், திடீரென்று உன்னுடைய அருளால், எனக்கு எதிர்பாராத வகையிலே ஒரு நல்வினை நிகழ்ந்தது. அதனால் உன்னைக் காண வேண்டும் என்ற ஆசை எழுந் தது. அந்த ஆசை வந்தவுடன் உன்னு டைய கைங்கரியத்தில் ஏற்புடையவனாக மாறினேன்.



3.இந்த நினைவு வந்தவுடன், எனக்கு உலகியல் வாழ்க்கை மிகவும் துன்பமானது என்று தோன்றியது.

4.தொடர்ந்து பிறவி எடுத்து வந்த நான், உன் அருளால் உன்னை அறிந்த பின், இனி வரும் கர்ம ரீதியிலான பிறவிகளைப் பொறுக்க முடியாமல் இருக்கிறேன். தேனாறு பாயும் குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த திருமலையில் எழுந்தருளி இருக்கும் உன் திருவடிகளை வந்து அடைந்தேன். என்னை நீ ஆட்கொள்ள வேண்டும்.



ஆட்கொள்ளுதல் என்றால் கைங்கரியத்தை வழங்குதல் என்று பெயர். "ஆத்மா இறைவனை அடைந்து பெறுகின்ற ஆனந்தம் என்பது அவனுக்கு ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்வது தான்" என்ற நம்மாழ்வார் வாக்கை வழிமொழிவது போல அடியேனை ஆட்கொண்டருளே என்று பிரார்த்திக்கிறார்.

திருமலைக்குச் சென்று எம்பெருமானை சேவித்தால் மட்டும் போதாது. அவன் திருவடிக ளிலே ஆத்ம சமர்ப்பணம் செய்ய வேண்டும். நமக்கேற்ற கைங்கரி யத்தை அவனிடம் பிரார்த்திக்க வேண்டும். அதைக் காட்டுவது தான் இந்தப் பாசுரம்.

சென்ற இதழின் தொடர்ச்சி...

912. ஓம் ஸப்தஸஹ: நம:

கஜேந்திரனின் கூக்குரலைக் கேட்டவன்.

ஓம் நிஷ்டா: நம:

ஒரே நிலையில் ஊன்றி இருப்பவள்.

913. ஓம் ஸிஸிர: நம:

கஜேந்திரனின் குரலைக் கேட்டு விரைந்து ஓடி வந்தவன்.

ஓம் காம்யா: நம:

எல்லோராலும் விரும்பத் தக்கவள்.

914. ஓம் ஸர்வரீகா: நம:

கஜேந்திரனைக் காக்க பஞ்சாயுதங்களை ஏந்தியவன்.

ஓம் ரம்யா: நம:

மகிழ்விக்கும் அழகுள்ளவள்.

915. ஓம் அக்ரூர: நம:

கருணை உள்ளம் உள்ளவன்.

ஓம் வரா: நம:

சகலவற்றிலும் சிறந்தவள்.

916. ஓம் பேஸவ: நம:

கஜேந்திரனைக் காக்கும் அவசரத்தில் ஆபரணங்கள் கலைந்தும் அழகியவன்.

ஓம் ஸ்ம்ருதி: நம:

நினைவாற்றலைத் தருபவள்.

917. ஓம் தக்ஷ: நம:

கஜேந்திரனை ரக்ஷிக்க விரைவாக வந்தவன்.

ஓம் சங்கிநீ: நம:


பாஞ்சஜந்யத்தைத் தரிப்பவள்.

திருவேங்கடம் (திருப்பதி – திருமலை) ஸ்ரீமதே பத்மாவதீ நாயிகா ஸமேத ஸ்ரீநிவாஸ திருவேங்கடமுடையான், வேங்கடாசலபதி, பாலாஜீ பர ப்ரம்மணே நம:

**குறிப்பு:**

நாள்தோறும் திருமலைக்கு ஆயிரக்கணக் கான பக்தர்கள் திருவேங்கடமுடையானைத் தரிசிக்க வருவதால் தரிசனத்திற்கும் நீண்ட நேரம் ஆகின்றது. ஆகையால் முன்கூட்டியே தகுந்த திட்டமிட்டு வந்தால் விரைவில் தரிசிக்க லாம். ஆந்திர மாநிலத்தில் திருப்பதி மாவட்டத் தில் அமைந்துள்ள இந்தத் திவ்யத் தேசத்திற்கு இந்தியாவின் பெரும்பாலான நகரங்களில் இருந்தும் ரயில் போக்குவரத்து வசதி உண்டு.

திவ்ய தேசம் தொடர்ந்து தரிசிப்போம்...




உருப்பட்டூர்
சௌந்தரராஜன்,
சென்னை.

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# கோவிந்தப்பெருமாள் என்னும் எம்பார்

- ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972



அக்டோபர் மாத இதழின் தொடர்ச்சி...

திருமங்கையாழ்வாரிடம் மிக்க பக்தி கொண்ட எம்பார் மங்கையர்கோன் அருளிய பொங்கும் புகழுடைய ஆயிரம் பாசுரமும் மற்றும் மூவாயிரமும் தம் மனத்தில் தங்கும்படி அருள இராமாநுசரை,

*எங்கள் கதியே!. இராமாநுசமுனியே!*
*சங்கை கெடுத்தாண்ட தவராசா*
*பொங்குபுகழ் மங்கையர்கோன் ஈந்த*
*மறையாயிரமனைத்தும்*
*தங்குமனம் நீ எனக்குத் தா.*

என்று ஒரு தனியன் மூலம் வேண்டுகிறார் எம்பார்.

*''தன் குடிக்கு ஏதும் தக்கவா நினையாள்...''* என்ற பெரிய திருமொழி பாசுரத்தில் (2–7–6) தாயும் மகளும் ஒரே குடியாகையால் நம் குடி என்று சொல்ல வேண்டி இருக்க, தன் குடி என்று மகளைப் பிரித்துச் சொன்னதன் கருத்தை எம்பார், தம் மகளாலேயே அக்குடிக்குப் பெருமை என்பதற்குச்சேர ஒரு ஐதிகம் காட்டுகிறார். ஒரு சமயம் பட்டர் பெருமாள் முன்பு கைசிகபுராணம் வாசிப்பதைக்கேட்டு ஆனந்தக் கண்ணீர் பெருக மனம் மகிழ்ந்து எழுந்து நின்று எம்பார் பட்டரைக்காட்டி, எப்படி ஜனக குலத்துக்கு சீதை புகழ் சேர்க்கப் போகிறாளோ அவ்வாறே பட்டரும் நம் குடிக்குப் பெருமை சேர்க்கப் போகிறார் என்று சுவைபட உரைத்தார். இவ்வாறு ஆழ்வார்களின் ஈரச் சொல்லான பாசுரங்களில் மற்ற ஆசார்யர்களைப்போல் எம்பாரின் பொருள் அமைப்பு விஞ்சி இருக்கும். விரிப்பில் பெருகும். அத்தகைய எம்பாருக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

(மாவளரும் பூதூரன் மலர்ப்பதத்தோன் வாழியே) பெருமை பொருந்திய ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்தவரான இராமாநுசரின் திருவடி நிழலாக இருப்பவர் எம்பார். இதுபற்றியே பட்டர் என்னும் ஆசார்யர் அருளிய ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (1–2) *''ராமாநுஜ பதச்சாயா....''* என்று எம்பெருமானாரை ஒருபோதும் விட்டு நீங்காத திருவடி நிழல் என்று அருளுகிறார். மனிதனை விட்டுப்பிரியாத நிழல் போலவும், பெருமாளை விட்டுப் பிரியாத இளைய பெருமாளைப் போலவும், இராமாநுசருடைய திருவடிகளையே தஞ்சமாகப் பற்றி அவரைப்பிரிந்து ஸகிக்கமாட்டாதவராய், அவருக்கு ஆள்பட்டிருப்பதையே முக்கியமாகக் கொண்டவர் என்று திருமழிசை அண்ணாஅப்பங்கார் ஸ்வாமி உரையிடுவர். *''யதிபதி சரணச்சாய''* என்கிறபடியே யதிராஜருடைய திருவடி நிழல் எனப் பெயர் பெற்றவர். ஒரு சமயம் கணியனூர் சிறியாத்தான் என்னும் ஆசார்யர் எம்பாரை வணங்கி, தேவரீர் மனத்தில் தஞ்சமாக நினைத்திருக்குமத்தை எனக்கு அவசியம் அருளிச்செய்ய வேண்டும் என்றார்.

உடனே எம்பாரும் தாசரதீ! எம்பெருமானார் ஸ்ரீபாதம் இரண்டு ஒழிய தஞ்சமாய் இருப்பதில்லை என்று கூறினார் என்பது வார்த்தா மாலையில் (68) அறியலாம். ஒன்றான எம்பார் ஜீயர் அருளிய பகவத் ராமாநுஜ அவயவ ப்ரபாவத்தில் இராமாநுசர் திருவடி நிழலான எம்பார் *''கோவிந்தார்ய: நிதம்பக:''* என்கிறபடியே இராமாநுசரின் இடையின் பிற்பகுதியாவர். எம்பாரே இராமாநுசரின் திருமேனி அழகைச் சொல்லும்போது *''பற்பமெனத்திகழ் பைங்கழல் உன்தன் பல்லமே விரலும்''* என்று திருவடி பற்றி

## 2026, ஜனவரி மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 03 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆருத்ரா தரிசனம். |
| 04 | ஸ்ரீநிவாச பத்மாவதி பிரணயக்கலக மஹோத்ஸவம் |
| 07–13 | ஆண்டாள் நீராட்டோத்ஸவம் |
| 14 | போகி, 15 மகர சங்கராந்தி–பொங்கல் |
| 16 | ஸ்ரீஆண்டாள் பரிணயோத்ஸவம், மாட்டுப் பொங்கல். |
| 23 | வசந்த பஞ்சமி; 25 இரத ஸப்தமி. |

அருளியபடி. மேலும், அந்தப் பாசுரத்திலேயே இறுதியாக *''இல்லை எனக்கெதிர் இல்லை எனக்கெதிர் இல்லை எனக்கெதிரே''* என்று செருக்காகச் சொல்லுவதும் காணலாம். பெரிய திருமொழிக்கு அமைந்த கடைசி தனியனில் "எங்கள் கதியே! இராமாநுச முனியே! சங்கைகெடுத்தாண்ட தவராசா! பொங்குபுகழ் மங்கையர்கோன் ஈந்த மறையாயிரம் அனைத்தும் தங்கு மனம் நீ எனக்குத் தா" என்று இராமாநுசரை வணங்குவது காணலாம்.

மேலும், *''வேயர் தங்கள்....''* (பெரியா.தி.5–4–11) என்ற பாசுரத்தின் முடிவில் சாயை போலப்பாட வல்லார் தாமும் அணுக்கர்களே என்ற தொடருக்கு சீடர்கள் எம்பாரிடம் இதற்குரிய பொருளை வினவினர். எம்பாரும், நான் உடையவர் ஸ்ரீபாதத்தில் இது கேட்கவில்லை. இருப்பினும் நீங்கள் கேட்ட அர்த்தம் போராது என்னவொண்ணாது. இப்போதே உங்களுக்குச் சொல்ல முடியாதபடி உடையவரும் திருக்கோட்டியூர் நம்பியிடம் சென்றுள்ளார். இருப்பினும் சொன்னேனாக வேணும் என்று உள்ளே சென்று இராமாநுசர் திருவடி நிலைகளை எடுத்துத் தன் திருமுடியில் வைத்துக்கொண்டார். இப்போது உடையவர் அருளிச்செய்தது கேட்கலாகாதோ என்று அந்தத் தொடரை, பாடவல்லார் சாயை போலத் தாமும் அணுக்கர்களே என்று வேறு விதமாகச் சுவைபட கொண்டுகூட்டுதலைக் காண்பித்து அருளினார். இதனால் பூதூரன் மலர்ப்பதத்தில் எம்பாருக்கு உள்ள பக்தி அறியலாகும். இதுபற்றியே "பூதூரன் மலர்ப்பதத்தோன் வாழியே" என்றவாறு.

*எம்பார் வாழித்திருநாம உரை தொடரும்...*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

**ஸ்வாமி புஷ்கரணி :**

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலையான் சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் உடல் சுத்தத்துடன் மன சுத்தியும் ஆகிறது.

**ஆகாச கங்கை :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் இருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**பாபவினாசம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் இருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தி.தி.தே. வனத்தோட்டம் :**

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்தில் வனத்தோட்டம் வளர்க்கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

**புவியியல் வளைவு (சிலாதோரணம்) :**

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலாதோரணம் ஆலயத்தின் வடமேற்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது.

**நாதநீராஜன மண்டபம் :**

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்டபத்தில் சொற்பொழிவுகள், ஹரிகதைகள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :**

அபூர்வமான புராணப் பொருட்களோடு மட்டுமல்லாமல் சித்திரம், சிலை கைவண்ண கலை வேலைப்பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியூஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானைத் தியானித்து மனதில் ஏற்பட்ட மனச்சுமைகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

**நாகுல பாவி (கிணறு)**

ஒரு பெரிய பாறையில் நாகங்களின் சிற்பங்கள் வடிக்கப்பட்டு அதனருகில் ஒரு திருக்குளம் உள்ளது. வராக ஸ்வாமி விருந்தினர் விடுதி எதிராகச் செல்லும் சாலையில், சேவாசதன் பின்புறம் உள்ள பாட்ட ஸ்ரீகங்கை அம்மன் ஆலயத்திலிருந்து சிறிது தூரம் சென்று இடதுபுறம் திரும்பினால் நாக தீர்த்தத்தைச் சென்றடையலாம்.

ஆகஸ்ட் மாத இதழின் தொடர்ச்சி...

**பதவுரை :**

இதில் அநிஷ்டநிவ்ருத்தி, இஷ்டப்ராப்தி போன்ற ரக்ஷணத்தைப் பிரார்த்திப்பது இங்கு முக்கிய அம்சமாகும். சேர்ந்துள்ள பாவங்களானவை துஷ்டர்களுடைய கூட்டத்தை நாசம் செய்வது என்ற கஷ்டமான கார்யமென்று கேவலம் தயையினால் செய்பவனே! கரதூஷணர் முதலியவர்களின் தொடர்பினால் யுத்த பூமியில் சத்ருக்கள் தூரத்திலிருந்தே ஓட்டம் செய்வதன் மூலமாக வெளிப்படுத்தப் பட்ட மிகுந்த வலிமைக்கு ஆதாரமானவனே! பாஞ்சஜன்யத்தின் ஒலியால் *“ந கோஷோதார்த்ருஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத்”* என்கிறபடி சத்ருக்களான துர்யோதனன் முதலானவர்களின் கோலா கலத்தை மண்ணுண்ணும்படிச் செய்தவனே! மதுஸூதனா! என் மனத்தில் இருப்பவனே! சத்ரு நிரஸனத்திற்காக வருவாயாக. என்னைக் காப்பாற்றுவாயாக. இன்னல்களைப் போக்கி, விருப்பம் உள்ளவையான (அநிஷ்டநிவ்ருத்தி இஷ்ட ப்ராப்தி) ரக்ஷணத்தை எனக்கு நல்க வேண்டும். வெளிப்புற சுத்தியை (பாஹ்யாந்தர சுத்தி) அகசுத்தியான மனத்தூய்மையை அருள்பவனே! மிக்க மங்கள கரமானதாய், குளிர்ந்த, மென்மை முதலிய குணப் பெருமையான, ஸாரமான (இனிமையான) உன்னுடைய கடாக்ஷத்தை விரைவாக என் மேல் படும்படிச் செய்வாய். வ்ருஷகிரி இறைவா! ஸ்ரீலக்ஷ்மீ



# உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம்

– டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன்,
திருப்பதி, 99855 99669.

தேவியோடு சேர்ந்து, *“வேங்கடபூதரே கிரீடந்தம் ரமயா ஸார்த்தம் ஸ்ரீநிவாஸம்”* என்கிறபடி வ்ருஷகிரியில் இருப்பதுபோலே என்னிடம் ஸஞ்சரிப்பாய். என்னுடைய மனமானது உலகப்பற்றான (லௌகிக) விஷயத்தை மறக்கப்படுவதை லக்ஷ்மீ பிராட்டியோடு சேர்ந்து நீ தன்னிடம் ஸஞ்சரிப்பது என்ற விஷயத்தை விட வேறான விஷயத்தில் செல்லாததாய், ஒவ்வொரு நாளும் உன்னையே அவ்வப்போது பக்தியோடு வணங்குகின்றது. எப்போதும் ஒளிர்கின்ற வேங்கடேச்வரனே! நீ சத்ருக்களான பாவங்களைப் போக்குவாயாக.

முன் சுலோகத்தின் இறுதியிலுள்ள “க$_4$” என்னும் எழுத்தோடு இந்தச் சுலோகம் தொடங்குகிறது. இந்தச் சுலோகத்தின் கடைசியுள்ள “உஜ்ஜ்வல” பதத்தோடு கடைசியான பதினொன்றாவது சுலோகம் முதன்மை பெறுகிறது. இதில் கடைசி வரியாகப் பிரயோகித்த இந்தச் சிறந்த பதத்தை மனதில் வைத்துக் கொண்டே கவி இந்த ஸ்தோத்ரத்திற்கு உஜ்ஜவல வேங்கடநாத ஸ்தோத்ரம் என்ற பெயரை வைத்தார் என்று சொல்லத்தகும். லக்ஷ்மி ஸம்பந்தவனாய் பகவான் தன் திருவுள்ளத்தில் ஆநந்தமடைவதை என்று ஆசைப்படுவதன் மூலமாகத் தான் மயர்வற மதிநலமருளப் பெற்ற ஆழ்வார்களின் நிலையை அடைவேன் என்று பிரார்த்திப்பதாகத் தெரிவித் துள்ளார் என்று சொல்லலாம். *“தாமரைக் கண்ணன் என்னெஞ்சினோடே”*, *“ஒண்சங்கதை வாளாழியான் ஒருவன் அடியேனுள்ளானே”*, *“மாயான் என்னெஞ்சிலுளானே”* முதலிய சொற்களால் நம்மாழ்வார், பகவான் தன்னுடைய மனதில் நிலைத்திருக்கிறார் என்று தெரிவித்துள்ளார் அல்லவா!

இன்னும் ஜ்வலிக்கும்...



# டிசம்பர் 2025
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

தொழில் துறையில் அலைச்சலும், செலவும் அதிகம் ஆகும். தூக்கம் குறையும்.கணவன் மனைவிக்குள் கருத்து வேற்றுமை உண்டாகும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகக் கவனம் தேவை. தொலைத்தூர யாத்திரையைத் தவிர்க்கவும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். பெற்றோரின் ஆரோக்கிய குறைபாடு நீங்கும். மொத்தத்தில் கடுமையாக உழைத்து முன்னேறும் மாதமிது.

**ரிஷபம்**

தொழில் துறையில் அலைச்சலும், நல்ல லாபமும் உண்டு. வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. தாயாரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. விரைவில் குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். கணவன் மனைவியிடையே இருந்த கருத்து வேறுபாடு நீங்கும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் மாதமிது.

**மிதுனம்**

தொழில் துறையில் அதிக வேலைப்பளு இருந்தாலும் முன்னேற்றமும், ஊதிய உயர்வும் உண்டு. இளைய சகோதரன் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உடல் ஆரோக்கியத்திற்குத் தகுந்த மருத்துவம் கிடைக்கும். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு விரைவில் குழந்தை பாக்கியம் கிடைக்கும். தர்ம காரியங்களில் நற்பெயரும் புகழும் கிடைக்கும். தெய்வ அனுகூலம் உடைய மாதமிது.

**கடகம்**

குடும்பத்தில் சுபச் செலவுகள் நடக்கும். கடன் வாங்கி வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. பழைய வாகனங்கள் வாங்குவதைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியம் மேம்படும். தொழில்துறையில் நல்ல வளர்ச்சியும், முன்னேற்றமும் உண்டு. பழைய கடன் சுமைகள் குறையும். உத்தியோகஸ்தர்களுக்கு விரைவில் பதவி உயர்வு உண்டு. உழைப்பில் முன்னேறும் மாதமிது.

**சிம்மம்**

குடும்பத்தில் விரைவில் சுப காரியங்கள் நடக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு விரைவில் பதவி உயர்வு உண்டு. குழந்தை இல்லாதவர்களுக்கு விரைவில் குழந்தை பாக்கியம் கிடைக்கும். புதிய தொழில் முயற்சியில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் உள்ளோரின் ஆரோக்கியத்தில் மிகவும் அக்கறை தேவை. மூட்டு வலிகள் உண்டாகும்.கடுமையாக உழைத்து முன்னேறும் மாதமிது.

**கன்னி**

உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு திருஷ்டி காரணமாகத் தொழில்துறையில் காரியத் தாமதமாகும். செலவிற்கேற்ற வரவு உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் அலைச்சல் காரணமாகத் தூக்கம் குறையும். கணவன் மனைவியிடையே இருந்த பிரச்சனைகள் தீரும். கால தாமதமாக வெற்றி பெறும் மாதமிது.

**துலாம்**

திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும். தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றமும், வளர்ச்சியும் உண்டு. பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். தொழில்துறையில் பழைய பாக்கிகள் வசூலாகும். உடன் பிறப்புகளினால் நன்மை உண்டு.தெய்வத் தல யாத்திரையில் நல்ல தரிசனம் கிட்டும். நல்ல யோகமான மாதமிது.

**விருச்சிகம்**

ஆரோக்கியத்திலும், பண விஷயத்திலும் மிகுந்த அக்கறை தேவை. வயிறு உபாதைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. பூர்வீகச் சொத்துகள் குறித்து தற்சமயம் பேச வேண்டாம். மாதத்தின் பிற்பகுதியில் ஓரளவு முன்னேற்றமும், பண வரவும் உண்டு. தொழிலில் வேலைப்பளு அதிகமாகும். பெண்களுக்கு ஏற்றமும், முன்னேற்றமும் தரும் இனிய மாதமிது.

**தனுசு**

ஆரோக்கியக் குறைபாடுகள் நீங்கும். செலவுகள் மாதத்தின் பிற்பகுதியில் குறையும். உறவினர்களால் இருந்த பிரச்சனைகள் தீரும். குழந்தைகளால் அனுகூலம் உண்டு. வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். பெற்றோரின் ஆரோக்கியம் மேம்படும். தெய்வ அருளால் நல்ல யோகம் பெறும் மாதமிது.

**மகரம்**

பண விஷயத்தில் எச்சரிக்கை தேவை. தொழிலில் செலவுகள் அதிகமாகும். குடும்ப உறுப்பினர்களோடு பேசும் போது வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். அதிக தண்ணீர் உள்ள இடங்களுக்குச் செல்ல வேண்டாம். செலவிற்கேற்ற வருமானம் உண்டு. மாணவர்கள் கடுமையாக உழைத்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். மிகவும் எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.


**கும்பம்**

ஆரோக்கியக் குறைபாடுகள் நீங்கும். தொழிலில் முன்னேற்றமும், லாபமும் உண்டு. தெய்வத் தல யாத்திரையில் நல்ல தரிசனம் கிடைக்கும். குழந்தைகளால் அனுகூலம் உண்டு. திடீர் தன வரவு உண்டு. குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். பண விஷயத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகமுண்டு.

**மீனம்**

தொழிலில் புதிய முயற்சிகள் செய்யலாம். கால தாமதமானாலும் வெற்றி நிச்சயம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். மனக்குழப்பங்கள் தீரும். தொழிலில் அலைச்சல் காரணமாகத் தூக்கம் குறையும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற அதிகச் சிரமப்பட வேண்டி இருக்கும். பெண்களுக்கு ஏற்றம் உண்டு. முயற்சியால் முன்னேறும் மாதமிது.

நீதிக்கதை



# எல்லாம் இறைவன் செயல்

**- வி.எஸ்.அமேயாஸ்ரீ, கோயம்புத்தூர்**

ஒரு கோயிலில் அர்ச்சகர் ஒருவர் இருந்தார். அந்த கோயிலின் பின் பகுதியில் ஒரு பூனைக்குட்டி சில நாட்களாகச் சுற்றி வந்தது. அந்த அர்ச்சகர் அதற்கு பால் ஊற்றிப் பாதுகாத்து வந்தார். ஒரு நாள் அந்தப் பூனைக் குட்டி மரத்தின் உச்சியில் ஏறி உட்கார்ந்து கொண்டு கீழே இறங்க பயந்துகொண்டு இருந்தது. அர்ச்சகரும் பாலை கீழே வைத்து அழைத்துப் பார்த்தார். ஆனால் அது கீழே இறங்க பயப்பட்டது. அர்ச்சகர் என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

மரத்தின் மேல் ஏறும் அளவிற்கு மரக்கிளை வலிமை ஆனதல்ல. எனவே ஒரு கயிற்றை கொக்கியுடன் வீசி மரக் கிளையைக் கயிற்றை பிடித்து இழுத்து வளைத்தால் பூனை குதித்து விடும் என்று யோசனை செய்து அதுபடி செய்தார். கயிறை இழுக்க கிளை வளைந்து கீழ் நோக்கி வந்தது.

ஆனால் கொக்கி வழுக்கிவிடவே கிளை வேகமாக தன்னிலை அடைய பூனைக்குட்டி தூக்கி எறியப்பட்டு கண்ணை விட்டு மறைந்தது. அர்ச்சகர் தன்னால் முடிந்த வரை பூனைக்குட்டியைத் தேடினார். கிடைக்கவில்லை. மனம் வருந்தி இறைவனிடம் தான் செய்த தவறால் பூனைக்குட்டிக்கு ஆபத்து நேர்ந்ததற்கு மன்னிப்பு கேட்டார்.

அடுத்த நாள் அவர் கோயிலுக்கு வரும் ஒரு பெண்ணை மளிகைக்கடையில் கண்டு நலம் விசாரித்தார். அந்த பெண் கூடையில் பூனைக்கான பிஸ்கட் இருப்பதைப் பார்த்து வீட்டில் பூனை வளர்க்கிறாயா என்று கேட்டார். அந்த பெண் இல்லை சாமி என் மகள் இரண்டு நாட்களாக பூனைக் குட்டி வளர்க்க வேண்டும் என்று என்னிடம் கேட்டாள். நான் மறுக்கவே அவள் அழ ஆரம்பித்தாள். நானும் அவளை சமாதானப்படுத்த கடவுளிடம் பூனைக் குட்டி கேள். அவர் கொடுத்தால் நாம் வளர்க்கலாம் என்று சொன்னேன். என் குழந்தை உடனே அங்கேயே கண்களை மூடி பூனைக்குட்டி வேண்டி பிரார்த்திக்க ஆரம்பித்தாள். என்ன ஆச்சரியம். ஒரு பூனைக்குட்டி ஆகாயத்தில் கால்களை விரித்தபடி பறந்து வந்து குழந்தை காலடியில் விழுந்தது. பிறகு அதை எடுத்துப் பால் கொடுத்து வளர்க்கிறோம் என்று சொன்னாள்.

எல்லாம் அந்த இறைவன் செயல் என்பதைப் புரிந்துகொண்ட அந்த அர்ச்சகர் தன் கவலையை மறந்து இறைவனுக்கு நன்றி சொன்னார்.


**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**

**பக்தர்களுக்கு அறிவிப்பு**

வெடிப்பொருட்கள், துப்பாக்கி, கைத் துப்பாக்கி, படை ஆயுதங்கள் தகுந்த உரிமம் உள்ளபோதும் திருமலைக்கு கொண்டு வருவது தடைசெய்யப்பட்டுள்ளது. தயவு செய்து யாத்திரிகர்கள் மேற்குறிப்பிடப்பட்ட வற்றை கொண்டு வர வேண்டாம் என்று அறிவுறுத்தப் படுகிறார்கள். தரிசனத்திற்குச் செல்லும்போது மின்னணு பொருட்களை கொண்டு செல்லவும் தடை செய்யப்பட்டு உள்ளது.

–தலைமை கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அலுவலர்

சிறுவர் உலகம்

# பல்சுவைப் பகுதி



எண்களை இணைத்தால் அழகான பஞ்சவர்ணக்கிளி நம் முன்னர் வரும். அதற்குத் தேவையான வண்ணங்களைத் தீட்டி இக்கிளியை வண்ண மயமாக்குங்கள்!


வண்ணம் தீட்டி மகிழுங்கள் !



பாதையைக் கண்டு பிடி!

கண்ணனைச் சென்றடைய ஆண்டாளுக்கு பாதையைக் காட்டி உதவிடுங்கள்!!






விளக்குகள் பல உள்ளன. பார்ப்பதற்கு ஒரே மாதிரி இருந்தாலும் அவற்றில் சில விளக்குகள் மாறி உள்ளன.
அவற்றைக் கண்டுபிடிப்போம். வாருங்கள்.

விடை :
விளக்குகள் 5,12,16,20,25 மாறி உள்ளன.

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-41

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. சிசுபாலன் ஆட்சிபுரிந்து வந்த தேசத்தின் பெயர்.........................................
2. எல்லோரும் ஓரினம்,ஓர்குலம், எல்லோரும் இந்தியர் எனக் கூறியவர் .........................
3. வேங்கடவன்தான் திருவரங்கனாகத் துயில் கொண்டான் எனக் கூறும் ஆழ்வார் ....................
4. ஆதித்தியர்களில் நான் விஷ்ணு என்று கூறியவர் ........................................
5. திருவெம்பாவையை இயற்றியவர் ......................................................
6. இராமாநுசருக்கு பஞ்ச ஸம்ஸ்காரங்களையும் செய்தருளியவர் ..............................
7. கைலாயத்தில் சிவகணங்களின் தலைவர்................................................
8. ஆண்டாள் நந்தகோபர் திருமாளிகையாக எதனை அனுகாரம் செய்தார்............................
9. இராமாநுஜரின் திருவடி நிழலாக இருந்தவர் ............................................
10. மார்கழி மாத வளர்பிறையில் வருகின்ற ஏகாதசி ........................................
11. ஒரு பதிகம் முழுவதும் நாராயணன் திருநாமத்தைப் பாடிய ஆழ்வார் ...........................
12. திருவைகுந்தவாயிலில் காவல் காப்பவர்கள் .............................................
13. பூலோகத்தில் சிவாலயங்களின் தலைமைக்காப்பாளர் என்றழைக்கப்படுபவர் ........................
14. ஐம்புலன்களையும் ஒன்றிணைக்காமல் செய்யும் பூஜை வீண் என்று கூறியவர் ......................
15. ஜெயவிஜயர்களை பூலோகத்தில் பிறக்கும்படி சாபம் அளித்தவர்கள்..............................

## போட்டிக்கான நிபந்தனைகள்




- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடி மக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்வித் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலை பேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.12.2025.

**விடையை எழுதுங்கள்!**

**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |




சக்கரத்தைச் சுற்றுங்கள்!



அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!

**விடைகள்**

1) துளசி வனம், 2) 173, 3) நாச்சியார் திருமொழி, 4)மார்கழி என்ற தனுர் மாதம், 5) ஆண்டாள், 6) பெரியாழ்வார், 7) வாரணம் ஆயிரம், 8) திருப்பாவை.

## கணித விளையாட்டு

இங்கு புத்தகத்தில் உள்ள கணித வினாவிற்குப் பொருத்தமான எழுதுகோல்களின் எண்ணிக்கை உள்ள விடையைப் பொருத்துக




**விடைகள்**

1) iii, 2) vi, 3) ii, 4) v, 5) iv

குழந்தைகளே!
மூங்கில் மரத்தினால் உருவாகி, காற்றை ஆதாரமாக கொண்டு வாசிக்கும் வாத்தியம்.
கர்நாடக இசைக்கருவிகளில் நானும் முக்கிய இடத்தை வகிக்கின்றேன்.
ஸ்ரீகிருஷ்ணர் என்னை எப்பொழுதும் அவர் திருக்கரங்களில் ஏந்தியிருப்பார்.
ஸ்ரீகிருஷ்ணர் என்னை வாசிக்கும் போது ஆநிரைகள், கோபியர்கள் என பேதமின்றி கூட்டம் கூட்டமாக அவர் முன்னர் மயங்கி நிற்பர்.
விழாக்காலங்களிலும், கச்சேரிகளிலும் என்னை தனித்தும் அல்லது பல வாத்தியங்களுடனும் வாசிப்பர்.

மழலைச் செல்வங்களே! மேலே குறிப்பிட்டது மற்றும் மேலே உள்ள சித்திரத்தின் அடிப்படையில் நான் யார் என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்...


விடை : புல்லாங்குழல்


சித்திரக் கதை

# திருமாலிடம் திருமந்திர உபதேசம் பெற்ற திருமங்கை மன்னன்

கதை மூலம் : திரு. ஸ்ரீநிவாச தீக்ஷிதலு.
சித்திரம் : திரு. கே. துவரகநாத்.

திருமங்கை நாட்டின் மன்னனான திருமங்கை ஆழ்வார் சோழ வளநாட்டில் திருவாலி–திருநகரி திவ்யதேசம் அருகில் உள்ள திருக்குறையலூரில் கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் அவதரித்தவர். இவரது இயற்பெயர் நீலன் ஆகும். குமுதவல்லி என்னும் மங்கையிடம் காதல் கொண்டு அவளிடம்...




குமுதவல்லி கோபத்தோடு திருமங்கை மன்னனிடம்...
நம் திருமண நிபந்தனைகளை மறந்து விட்டீர்களா? நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.
குமுதா! நான் மறந்துவிடவில்லை.
திருமங்கை மன்னனின் அரச கஜானாவும் தீர்ந்ததால் அருகில் உள்ள காட்டிற்குச் சென்று கொள்ளை அடிப்பதில் ஈடுபடலானார். ஒரு நாள் எம்பெருமானும் எம்பெருமாட்டியும் திருமணக் கோலத்தில் அவ்வழியாக வந்தனர். அப்போது...
மண மக்களிடம் இருந்து அனைத்து நகைகளையும் பெற்றுக் கொண்ட மங்கை மன்னனால் மணமகனின் கால் விரல் மோதிரத்தை மட்டும் கழற்ற முடியவில்லை. இதற்கு என்ன மந்திரம் செய்தாய் என மன்னன் வினவ...
நான் கூறும் மந்திரத்தைக் கூறினால் கால் விரல் மோதிரத்தை எளிதாகக் கழற்ற இயலும்.
மங்கை மன்னனுக்கு நாராயண மந்திரத்தை உபதேசித்தார் மணமகனாக வந்திருந்த எம்பெருமான்...
ஓம் நமோ நாராயணாய!
ஓம் நமோ நாராயணாய!
மங்கை மன்னன் எட்டெழுத்து மந்திரத்தை உபதேசித்த உடன் எம்பெருமானும் திருக்காட்சி அளித்தார்.
ஸ்வாமி! என்னை மன்னித்து அருள் புரியுங்கள்.
மங்கை மன்னா நற்பணிகள் செய்திடவே நீ திருடனானாய், என் பரம பக்தன் ஆவாய்.
பரகாலன், கலியன், நீலன், மங்கையர்கோன் எனப் பல பெயர்கள் கொண்ட திருமங்கை மன்னன் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரானார்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/– ☐ ரூ.2,400/–(12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடைத் திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/– ஆயுள்சந்தா ரூ.2,400/– (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.–யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D. P.G.Dip. in JMC. on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Published at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.,P.G.Dip. in JMC.









**ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகளின் தலைமையில் திருமலையில் திருஅத்யயனோத்ஸவம் 19-12-2025 முதல் 12-01-2026 வரை**

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-11-2025 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 1st of Every month.

